# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**மே 2004 ஜீவியம் 10 மலர் 1**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| எங்கள் குடும்பம் | 2 |
| லைப் டிவைன் | 24 |
| இம்மாதச் செய்தி | 32 |
| சாவித்ரி | 33 |
| பிரம்மம், புருஷா, ஈஸ்வரா — மாயா, பிரகிருதி, சக்தி | 35 |
| அன்பர் கடிதம் | 41 |
| அஜெண்டா | 45 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 47 |
| இதுவோ உம் ரௌத்திரக் கருணை | 51 |
| லைப் டிவைன் - கருத்து | 54 |
| டிசம்பர் 5ஆம் தேதி 1950 மகா சமாதி தினம் | 56 |


❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

## எங்கள் குடும்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கணவர் : பிறருக்கு உதவி செய்வது அதிர்ஷ்டம். அதை நாம் செய்கிறோம்.

பெரியவன் : அதுவும் அம்மாவுக்கு ஆகாது.

தாயார் : அன்னை அப்படிச் சொல்கிறார்.

பெண் : ஏனம்மா?

தாயார் : ஒரு பெண் தாய்லாந்தில் வேலை செய்தாள். அவர் அமெரிக்கப் பெண். அவளுடைய கல்லீரல் வேலை செய்யவில்லை. 48 மணி நேரத்தில் இறந்துவிடுவாள் என வீட்டிற்குச் செய்தி. தங்கை புறப்பட்டு வந்தாள். விமானப் பிரயாணம் முழுவதும் அன்னைக்குப் பிரார்த்தனை செய்தாள். கல்லீரலுக்குப் பதிலாக கல்லீரல் கண்டுபிடிப்பது சிரமம், மாதக்கணக்காகும். அதிர்ஷ்டவசமாக 48 மணி நேரத்திற்குள் பதில் கல்லீரல் கிடைத்தது. புது கல்லீரலை வைத்தார்கள். பெண் பிழைத்துக்கொண்டாள். அன்று முதல் தங்கையைத் தனக்குப் பரம எதிரியாக நடத்துகிறாள். 5 ஆண்டுகள் கழித்து அவளுக்குக் கான்சர் வந்தது. தங்கை மீண்டும் அவளுக்காகப் பிரார்த்திக்க விரும்பினாள். இந்த விஷயத்தில் யோசனை கூறும் நண்பர் இம்முறை அவளைத் தடுத்துவிட்டார். என்றாலும் அவளால் தமக்கைக்காகப் பிரார்த்திக்காமல் இருக்க முடியவில்லை. அடிக்கடி அவர் சொல்லை மீறிப் பிரார்த்திப்பாள். உடனே அக்காள் அவளிடம் சண்டைக்கு வருவாள். இது விலக்கில்லாத விதி.



பெண் : புரியவில்லை. ஏன் உதவி செய்பவருக்கு ஊறு செய்யவேண்டும்?

தாயார் : ஏன் என்பது பிறகு. நடப்பது இது. இதிலிருந்து நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

கணவர் : நாம் உதவி செய்த அனைவரும் நமக்கு எதிராகப் போகவில்லையா. எதிர்வீட்டுப் பையனுக்கு வேலை வாங்கிக் கொடுத்தேன்.

பெரியவன் : அவன்தான் எதிரி.

தாயார் : 140 ரூபாய் சம்பாதித்தவருக்கு 500 ரூபாய் சம்பளத்திற்கு ஏற்பாடு செய்தோம்.

சிறியவன் : நமக்கு முதல் எதிரி அவர்தாம்.

கணவர் : சர்க்கார் எடுத்துக்கொண்ட மனையை மீட்டுக் கொடுத்தோம்.

சிறியவன் : எனக்கு அது தெரியாதே. அவர் செய்தது பொறுக்க முடியாததே.

தாயார் : இதுவே மனித சுபாவம். நமக்குப் பார்ட்னர் உதவுகிறார். அவரிடம் நமக்குப் பகைமை வரக்கூடாது. அது முக்கியம்.

கணவர் : தாசீல்தார் மகனுக்கு M.A. அட்மிஷன் பெற்றுக் கொடுத்தோம். அதன்பிறகு அவன் வரவேயில்லை. எத்தனை முறை வந்து போனவன்.

தாயார் : துரோகம் பல வகையின. சம்பளம் கொடுக்கும் ஸ்தாபனத்திற்குத் துரோகம் செய்தவர் உனக்குத் தெரியுமே. வேலையே செய்யமாட்டார். வேலையை

ஏமாற்றுவதில் பெருமைப்படுவார். அவருக்குப் பிரமோஷனே வரவில்லை. ஓய்வு பெற்றபின் உறவினர்கள் அவர் தம் ஸ்தாபனத்திற்குச் செய்ததை அவருக்குச் செய்கின்றனர். அத்தனை பேரும் அலட்சியம் செய்கின்றனர். சட்டம் தவறாது.

பெரியவன் : அம்மா சொல்படி நடப்பதானால், பூமிக்கு மேலே ஒரு அடியில் நடப்பதுபோலிருக்கும்.

பெண் : நல்ல பழக்கம் அவ்வளவு கடினம்.

கணவர் : நம் பாக்டரிக்குப் பக்கத்து ஷெட் விலைக்கு வருகிறது. பார்ட்னர் அதை வாங்க ஆசைப்படுகிறார். சட்டப்படி செல்லாது. எல்லோரும் வேறு வழிகளைப் பயன்படுத்துகின்றனர். நீ என்ன சொல்கிறாய்?

தாயார் : எனக்கு விபரம் தெரிந்தால் சொல்வேன். நாம் சட்டத்திற்கு எதிராகப் போகாவிட்டால், சட்டம் நமக்குச் சாதகமாகச் செயல்படும்.

கணவர் : பார்ட்னர் நீ சொல்வதைக் கேட்பார்.

பெரியவன் : ஏம்பா, அம்மா வீட்டில் சமையல் பண்ணுகிறவர்கள். அவர்களைப் போய் பிஸினஸ் விஷயமெல்லாம் கேட்டால் என்ன தெரியும்? மதர் விஷயம் கேட்கலாம். எல்லாரும் செய்வதை நாம் செய்யாவிட்டால் அந்த ஷெட் கிடைக்காது.

சிறியவன் : அப்பா, இதெல்லாம் ஏம்பா அம்மாவைக் கேட்கிறீங்க?

பெண் : கேட்பது வேறு. செய்வது வேறு. எப்படிப்பா, அம்மாவுக்கு ஷெட், பாக்டரி தெரியும்?



கணவர் : எல்லோரும் சும்மாயிருங்க. நீ சொல்லும்மா. குறுக்கே பேசினா, உங்களையெல்லாம் எழுந்து போகச் சொல்வேன்.

தாயார் : நடக்கறது உங்க முடிவு பிரகாரம் நடக்கும்.

கணவர் : என் முடிவு அன்னை சொல்படி நடக்கவேண்டும்.

பெரியவன் : அதாவது அம்மா சொல்படி நடக்கவேண்டும்.

போன் வருகிறது. பார்ட்னர் பேசுகிறார். கணவர் போனை எடுத்தார். ஷெட் விஷயம் நல்ல செய்தி என்றார். நேராக வருகிறாராம்.

சிறியவன் : அம்மாதான் அன்னை.

கணவர் : நீங்கள் எல்லாம் எழுந்து போங்க.

கொஞ்ச நாழி கழித்து பார்ட்னர் வந்தார். ஷெட் மேனேஜர் இவரைக் கூப்பிட்டு, “பக்கத்து ஷெட் காலியாகிறது. சட்டப்படி நமக்கு வாராது. அதற்கு ஏலம் போடவேண்டும். ஏலம் போட்டால் விலை அதிகமாகும். எனக்கு அதிகாரம் உள்ளது. நான் அன்றைய விலைக்கே உங்களுக்குத் தருகிறேன்'' என்றார் என்ற செய்தியை முழு விவரத்துடன் கூறினார்.

கணவர் : இது என்ன? வாயால் முடிவைச் சொன்னால் உடனே நடக்கிறதே.

தாயார் : அது எல்லோருக்கும் இல்லை. முடிவை நிறைவேற்றினால்தான் நடக்கும். உங்களுக்குத்தான் முடிவு எடுத்தால் நடக்கிறது.

கணவர் : அது நல்லதா? பெரியதா?

பார்ட்னர் : நீங்க நல்ல முடிவைத் தொடர்ந்து எடுக்கவேண்டும். சில பேர் அழகாகப் பேசுகிறார்கள். நாம் அவர்களைப் பார்த்துக் கற்றுக்கொள்ளவேண்டும்.

கணவர் : நீங்கள் நன்றாகப் பேசுகிறீர்கள். எனக்கு யார் அழகாகப் பேசுகிறார்கள் எனத் தெரியும். எதைச் சொல்லக் கூடாதோ அதை நாம் சொல்கிறோம். அவர்கள் அதைச் சொல்லமாட்டார்கள். அது கேட்பவருக்கு இனிமையாக இருக்கும்.

தாயார் : நாம் ஒருவனை "நீ மடையன்" என்று சொல்லும் பொழுது அவர்கள், ''நீ சொல்வது எனக்குப் புரியவில்லை" என்பார்கள். அதைச் சொல்கிறீர்களா?

கணவர் : அதுவும்தான். நான் சொல்வது வேறு. இரயிலில் டிக்கெட் கிடைக்கவில்லை என்றால், "முன்பே ரிசர்வ் செய்யவில்லையா?" என்பது அவர்கள் குறையை அவருக்குச் சுட்டிக்காட்டுவது போலாகும். நான் சொல்பவர்கள் அதைச் செய்யமாட்டார்கள்.

பார்ட்னர் : அதற்குப் பக்குவம் அதிகம் தேவை.

கணவர் : அந்த பக்குவத்திற்கு 3 காரணங்கள் உள்ளன.

1) அவர்கள் புத்திசாலிகள்.
2) அந்த நாளில் ராஜாவுடன் பழகுபவர்கள் ஒரு சொல் தவறிச் சொல்லிவிட்டால் தலை போகும். இவர்கள் பெரிய இடத்தில் பழகியவர்கள்.
3) இவர்கள் தயவு, பரிசு எதிர்பார்ப்பவர்கள். அதனால் குறையைச் சொல்லாமலிருக்கக் கற்றுக்கொண்டார்கள். நமக்குப் புத்திசாலித்தனமோ, பழக்கமோ, தயவோ இல்லை.



பார்ட்னர் : அதிர்ஷ்டம் என்றால் என்ன?

தாயார் : பூர்வஜென்மப் புண்ணியம், அதிகத் திறமையுள்ளவர் குறைவான திறமை தேவைப்படுமிடத்தில் வேலை செய்வது, அடக்கம், நாம் பிறருக்குச் சமம் என்ற அறிவு, எவருக்கும் எதுவும் தெரிய வாய்ப்புண்டு என்ற தெளிவு, பிறர் அறிவைப் பாராட்டும் பரந்த மனப்பான்மை ஆகியவை அதிர்ஷ்டம் தரும். தனக்குரியதைக் கேட்காமலிருக்கும் அடக்கம் அவற்றுள் பெரியது.

பார்ட்னர் : ஒவ்வொன்றையும் விளக்கமாகக் கூறுங்கள்.

தாயார் : பூர்வ ஜென்மப் புண்ணியம் என்பதை ஏற்கனவே பெற்ற அதிகத் திறமை எனலாம். அதிகத் திறமையுள்ளவர் குறைவான திறமை தேவைப்படுமிடத்தில் அதிகப் பலன் பெறுவது இயற்கை. அதை நாம் அதிர்ஷ்டம் என்கிறோம். அடக்கம் என்பது திறமையுள்ளபொழுது திறமை இல்லாததுபோல் நடக்கும் பாங்கு. பிறர் அறிவைப் பாராட்டுவதும் அடக்கமே. தனக்குரியதைக் கேட்காமலிருப்பதும் அடக்கம்.

**அடக்கம் அதிர்ஷ்டம் எனப்படுகிறது.**

பார்ட்னர் : அந்த நாளில் அடக்கப்பட்டவருக்குக் கட்டாயமாக அடக்கம் வந்ததால் இன்று அவர்கள் அதிர்ஷ்டம் பெறுகிறார்கள்.

தாயார் : ஆமாம். அடக்கம் அதிர்ஷ்டம் என்பதை அறிந்து, இன்றில்லாத அடக்கத்தை நாமே ஏற்றுக்கொள்வது அந்த நிலையில் திருவுருமாற்றம். அது பேரதிர்ஷ்டம். அன்னை அருளைப் பெற நாம் செய்யவேண்டியது

அது. மறுத்துப் பேசுவது தரித்திரம். மறுத்துப் பேசாதது அதிர்ஷ்டம் என்பது இவற்றுள் முக்கியமானது.

பார்ட்னர் : பிரம்மம் என்பதை விளக்கமுடியுமா?

தாயார் : எந்தக் குணமும், ரூபமும் இல்லாதது பிரம்மம். அது எல்லாவற்றையும் சிருஷ்டித்தது. சிருஷ்டியால் குறையாதது. குறையாதது மட்டுமன்று, அதிகப்படவும் அதனால் முடியாது. நாமே அந்தப் பிரம்மம் என அறிவது பிரம்மம் சித்திப்பது. அதுவே முடிவான அதிர்ஷ்டம்.

பார்ட்னர் : எந்தக் குணமும், ரூபமும் இல்லை நமக்கு என்றறிந்தால் அடக்கம் வந்துவிடும். அது வந்தால் அதிர்ஷ்டம் வரும். எதையும் சிருஷ்டிக்கலாம். குணமேயில்லை, ரூபமேயில்லை என்றால் எப்படிக் குறைய முடியும், அதிகப்பட முடியும். அது அதிர்ஷ்டம்தான்.

தாயார் : நமக்குள்ள குணங்கள், ரூபங்கள் முக்கியமானவை அல்ல எனத் தெரிவது அடக்கம். அவை குணங்களேயில்லை, ரூபமேயில்லை என்பது பெரிய விஷயமன்றோ? இந்த ஞானம் குணத்தினின்று விடுதலை செய்கிறது. நமக்குள்ள உத்தியோகத்தைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை. எப்படிக் குணத்தைப் பாராட்டாமலிருப்பது?

பார்ட்னர் : நமது கெட்ட குணங்களை நாம் முக்கியமாகப் பாராட்டுகிறோம். நம் அந்தஸ்தை நாம் பாராட்டாவிட்டால், உடனே அனைவரும் பாராட்டுவார்கள். அதுவே அதிர்ஷ்டமாகும்.



தாயார் : அன்னை கொடுக்கத் தவறுவதில்லை. நாம் பெறத் தவறுகிறோம். V.C. post 5 பேருக்கு வந்தது. அது அவர்களில் ஒருவருக்குத்தான் தெரியும். 5 பதவிகளும் உடனிருந்த நல்லவர்கட்குப் போய்விட்டது. இந்த 5 பேரும் அன்னை, அன்னை அன்பர்களை நெருங்கி இருந்ததால், அவர்களால் குறைபடாமல், பொறாமைப்படாமலிருக்க முடியவில்லை. தூர இருந்தவர்கட்கு இங்குள்ள நிலைமை தெரியாது. குறைப்பட, பொறாமைப்பட சந்தர்ப்பமில்லை. அவர்கள் இவர்கட்கு வந்ததைப் பெற்றுக்கொண்டனர். இந்த ஐந்து பேர்கள் விஷயத்திலும் நாம் தெளிவாகப் பார்த்தோம். நம்மால் குறைப்படாமல், பொறாமைப் படாமலிருக்க முடியுமானால், அன்னையிடம் பெற முடிவேயில்லை.

கணவர் : என்னால் குறை சொல்லாமலிருக்க முடியாது. அது முடியுமா என எனக்குத் தெரியவில்லை. என்னால் முடியும் என்றால் நான் செய்துவிடுவேன்.

பார்ட்னர் : This is a good attitude. அது சரி. நாமாகத் தவறு செய்யக்கூடாது.

தாயார் : நாமாகத் தவறு செய்யாவிட்டால் பிரச்சினை வாராது. வாய்ப்பு வரவேண்டுமானால், பிறர் தூண்டுதலாலும் தவறு செய்யக்கூடாது.

சிறியவன் : என்னென்னமோ சொல்கிறீர்களே. அவற்றை எல்லாம் சுருக்கமாகச் சொல்லக்கூடாதா?

தாயார் : Good character, நல்ல சுபாவம் வேண்டும்.

பெண் : Character, சுபாவம் யோகத்திற்குத் தடை.

தாயார் : Manners, behaviour, character, personalityஐக் கடந்தது யோகம். அது யோகத்திற்குச் சரி. நம்மவர்கட்கு manners பழக்கமே பத்தாது. இவையெல்லாம் வந்தால் வாழ்க்கை அதிர்ஷ்டமாக இருக்கும்.

பெண் : அன்னையிடம் பலன் பெருகுவதற்குக் காரணம் என்ன?

தாயார் : பெருகுவதற்கு சக்தி வேண்டும்.

பெண் : பழக்கம் சக்தியைத் தருமா?

தாயார் : முதலில் ஒரு நல்ல பழக்கம் உற்பத்தியாகப் பெற்றோர் எவ்வளவு முயல்கிறார்கள். அதைக் காப்பாற்ற குழந்தைகள் எவ்வளவு பாடுபடுகிறார்கள். அந்த சக்தி எல்லாம், சக்தியைப் பெருக்கப் பயன்படுகிறது.

பெரியவன் : ஏன் யோகத்திற்குத் தடையானது, வாழ்விற்குப் பயன்படுகிறது?

தாயார் : அவை எதிரானவை. சக்தி உழைப்பிலிருந்து எழுகிறது. நீ யாருக்காக உழைத்தாலும், உனக்குரிய பலன் தவறாது வரும். படிக்காதவனுக்குப் பட்டம் பெற உழைத்தால், பணமில்லாதபொழுது பல வகைகளிலும் பணம் ஏராளமாக வந்து சேர்கிறது. எந்த உழைப்பும் வீண்போகாது. உழைப்பாளி கஷ்டப்பட்டான் என்பது உலகிலில்லை.

சிறியவன் : உழைப்பாளி கஷ்டப்படுகிறான் என்பது எல்லோரும் சொல்வது.

தாயார் : கஷ்டப்படுபவனைப் பார்த்தால், அவன் உழைப்பாளி இல்லை, உழைப்பாளி எனக் கூறுபவன் எனத் தெரியும். உழைக்காமல் ஊரை ஏமாற்றுவதாக நினைப்பவன் தன்னையே ஏமாற்றிக்கொள்வதை அவன் அறிவதில்லை.



பெண் : அடிக்கடி சொல்கிறீர்களே, 1 ஏக்கர் 365 ஏக்கராயிற்று, 10000 ரூபாய் 2½ இலட்சம் ரூபாயிற்று, 11 இலட்சமாயிற்று, 100 ரூபாய், 200 ரூபாய் கொல்லை வருமானம் 1 இலட்சம், 1½ இலட்சமாயிற்று என்று, இந்தப் பெருக்கம் எதிலிருந்து வருகிறது?

தாயார் : கொல்லையில் வருமானம் பெற்றவர், அந்த பகுதிகளிலேயே சிறப்பான உழைப்பாளி எனப் பெயர் பெற்றவர். 1960 முதல் 1972வரை செய்த பல வேலைகளில் பலன் கைக்கு வாராததால், 10000 ரூபாய் வசூல் செய்யப் போனபொழுது அது பெருகியது. அந்த 12 ஆண்டுகளில் செய்தது 24 ஆண்டுகள் வேலை. அங்கிருந்த சந்தர்ப்பங்கள் பலனைத் தடுத்தன. பொற்கிழியில் அது பலித்தது. 1 ஏக்கர் 365 ஏக்கராயிற்று என்றால் ஒருவர் திறமையை 365 மடங்கு உயர்த்தும் வேலையைச் செய்ததால் அது நிலத்தில் தெரிந்தது. உள்ளது போகாது. அன்னையை அறிய முயல்வது ஆன்மீக உழைப்பு. அதுவும் பலன் எதிர்பார்க்காத உழைப்பு. அதற்குப் பலன் வரும்பொழுது அளவுகடந்தும் வரும்.

பார்ட்னர் : நம் பாக்டரி எப்படி வந்தது என நான் இதுவரை எவரிடமும் சொல்லவில்லை. அது வந்ததே நீங்கள் சொல்வது போலத்தான். இந்த மாதிரி லைசென்ஸ் எல்லாம் நம்ம மாதிரியுள்ளவர்க்கில்லை. அது தொழிலில் நெடுநாளிருந்து, மார்க்கட், பணம் கையிலிருப்பவர்க்கு உண்டு. நமக்கு எதுவுமே இல்லையே. ஒரு நாள் உங்களுடன் (கணவருடன்)

பேசியபொழுது நீங்கள் அன்னையைப் பற்றிக் கூறினீர்கள். இப்போ அம்மா சொன்ன விஷயங்களைச் சொன்னீர்கள்.

கணவர் : எனக்கு நினைவில்லை.

பார்ட்னர் : நான் அதைப் பற்றியே சிந்தனை செய்துகொண்டு இருந்தேன். இரயிலில் போகும்பொழுது சிந்தனை கற்பனையாகி, கற்பனை காட்சியாகி, நான் மலர்ந்து பூரித்த சமயம் உடனிருந்தவர் பேச ஆரம்பித்தார். இறங்கிப் போகும்பொழுது அவருடன் காரில் வரச் சொன்னார். வீட்டிற்கு அழைத்துப் போனார். கம்பெனியைப் பற்றிச் சொன்னார். எனக்கு எதுவுமே விளங்கவில்லை. பிரியமாகப் பெரிய மனுஷன் பேசுவதாக நினைத்தேன். தொடர்பு நீடித்தது. "நான் அதிர்ஷ்டக்காரரைத் தேடினேன். நீங்கள் எனக்கு அதிர்ஷ்டம்" என்றார். கம்பெனி ஏற்பட்டது.

கணவர் : எங்களுக்கு நீங்கள் அதிர்ஷ்டம்.

பார்ட்னர் : தலைகீழே சொல்கிறீர்கள்.

தாயார் : வந்த அதிர்ஷ்டத்தைக் காப்பாற்றுவது அவசியம். மார்க்கட் வந்தது அதைவிடப் பெரியது.

பார்ட்னர் : மனம் பக்குவப்படுவது எல்லாவற்றையும்விடப் பெரியது.

கணவர் : உங்களுக்கு மனம். எங்களுக்கெல்லாம் பழக்கம் வரவேண்டும். கணவர் மனைவி தகராறில் சுமுகம் மலர நம்பிக்கையில்லாதவர் நண்பர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு பயன்படுத்தினார். விவாகரத்தாகிவிட்டது. அவர்கட்குச் சுமுகம் அப்படித்தான் வரவேண்டும் போலிருக்கிறது.



பார்ட்னர் : சைனாவில் I Ching ஜோஸ்ய புத்தகத்தில் ஒரு வாக்கியம் பல இடங்களில் வரும், "நேர்மையை விடாது பின்பற்றினால் முடிவில் பலனுண்டு" என்பது அவ்வாக்கியம். அதுவே அன்னை கூறுவதுமாகும். Infinity அனந்தம் என்பது என்ன?

தாயார் : நமக்கு அனந்தம் வாழ்வில் அறிமுகமானது காமதேனு, கற்பக விருக்ஷம், அட்சயப் பாத்திரம்.

கணவர் : அவையெல்லாம் புராணம். நம்ம வாழ்வில் சொல்ல முடியாதா?

தாயார் : சூடான ஐஸ், ஜில்லெனும் நெருப்பு உண்டா?

பார்ட்னர் : எதிரானவையாயிற்றே.

தாயார் : அனந்தத்திற்குள் எதிரானவை உடன்பாடாகும். அனந்தத்திற்குள் முடிவில்லை என்பதால் சூடு, நெருப்பு, ஜில், ஐஸ், போன்ற முடிவான பொருள்கள் தங்கள் முடிவை இழக்கின்றன. அவையும் நாம் காணலாம்.

கணவர் : சூடான ஐஸ் காணலாமா?

தாயார் : அது (physical) ஜட உலகில். நாம் (vital) வாழ்வில் காணலாம். ஒரு பொருளை வேண்டாம் என்று பெறுபவர் கூறியபின் அதை அவருக்குக் கொடுக்கும் சக்தி உலகிலில்லை. அதுவும் அவருடைய தகுதிக்கு மீறியதானால், "வேண்டாம்" என்ற சொல் அதை ரத்து செய்துவிடும். இந்த ஜென்மத்தில் அவருக்கு அது இல்லை. அளவுகடந்த பெரிய விஷயமானால் "வேண்டாம்" என்ற நினைப்பே ரத்து செய்யும். ஒருவர் தம் முயற்சியால் - பெரு முயற்சியால் - முடியாது

எனக் கண்டதைப்போல் 5 மடங்கு, 10 மடங்கு அவருக்கு மற்றொருவர் செய்வது என்பது இல்லை. அதுவும் பெறுபவரே வேண்டாம் என்ற பிறகு நடக்காது. நான் சொல்பவர் கேலி செய்தார். வருவதைப் பெறுபவர் கேலி செய்தபின் வந்ததாக வரலாறில்லை. அது அவருக்கு மட்டுமன்று, அவர் சந்ததிக்கே வாராது. அப்படிப்பட்ட மனிதருக்கு அது பலிக்கும்வகையில் செயல்பட முடியுமா? அதுவும் சொல்லியதுபோல் 25 மடங்கு பலிக்கும்வகையில் செயல்பட தெய்வ சக்தியால் முடியாது. பிரம்மத்தின் அனந்தத்தால்தான் முடியும். அதுவும் நம் அனுபவம். அநேகமாக, பெரும்பாலான நம் அனுபவங்கள் அவை போன்றவையே. அங்கெல்லாம் நாம் காண்பது அனந்தம். எதுவுமில்லாமல் எல்லாவற்றையும் சிருஷ்டிப்பது அது.

பார்ட்னர் : திருப்தியான விளக்கம். பெறுபவரே முடியாது, வேண்டாம் என்றால், கேலி செய்தால், கொடுக்கும் சக்தி உலகிலில்லை. அது இருக்கிறது எனில் அது அனந்தமான சக்திதான். மெக்ஸிகோவில் பர்ஸ் கிடைத்தது எனில் எப்படிக் கிடைத்தது எனக் கூற முடியுமா?

தாயார் : தத்துவம் ஒரு பகுதி, நடைமுறை அடுத்தது. இரண்டையும் இணைப்பது நாம். திருடனை போலீஸ் பிடிக்க எல்லா ஸ்டேஷன்கட்கும் செய்தி அனுப்பியது. அன்னை என்பது ஒரு சூட்சும ஸ்தாபனம். அது உலகெங்கும் பரவியுள்ளது. அன்பர் அன்னைக்குக் கேட்கும்படிக் கூப்பிடவேண்டும். அன்னை மெக்ஸிகோவிலும் உள்ளார் என நம்பிக்கை வேண்டும்.



கணவர் : அதெப்படி இல்லாமல் போகும்?

தாயார் : அன்னை விநாயகர் பேப்பர் வெயிட்டைக் கையில் எடுத்தபொழுது அதிலிருந்து விநாயகர் வெளியில் வந்தார். "நீ உண்மையில் இருக்கிறாயா?" என அன்னை கேட்டார். விநாயகர் செல்வம் தரும் கடவுள் என்பது வடநாட்டு மரபு. அன்னை அவரை, "என் செலவுக்குப் பணம் வேண்டும்'' என்றார். 10 ஆண்டுகள் பணம் வெள்ளமாக வந்தது. அதன்பிறகு வறண்டு விட்டது. அன்னை மீண்டும் விநாயகரை அழைத்து "என்னவாயிற்று?" என்று விசாரித்தார். "உங்கள் செலவு பெரியது. என்னால் முடியாது" என்றாராம். அதன்பிறகு அன்னை விளக்கம் சொன்னார். இந்தியாவில் வேலை நடந்தவரைக்கும் விநாயகர் பணம் வந்தது. அமெரிக்காவில் வேலையை ஆரம்பித்தவுடன் பணம் நின்றுவிட்டது. அமெரிக்கர்கட்கு விநாயகர்மீது நம்பிக்கையில்லை. அதனால் அந்தச் செலவுக்குப் பணம் தர அவரால் இயலாது என்றார்.

கணவர் : அன்னை எல்லா நாடுகளிலும் உள்ளார் என்பதை நாம் ஏற்க வெளிநாடு போய்ப் பார்த்தால்தான் தெரியும் போலிருக்கு.

பார்ட்னர் : அங்கெல்லாம் போனபின் அன்னை நினைவு வருவதே கஷ்டம்.

தாயார் : அவர் தம் முயற்சிகளெல்லாம் முடித்தபின் கூப்பிடுகிறார். அடுத்த வேளைக்கு வழியில்லை என்று கூப்பிடுகிறார். சூட்சும ஸ்தாபனமிருப்பதால் கேட்கிறது. போலீஸ் என்ற ஸ்தாபனம்போல் அன்னை சூட்சுமத்தில் வேலை செய்யும் ஸ்தாபனம். குரல்

அன்னைக்குக் கேட்டு அன்னை பொருளுக்கு உத்தரவிட்டு, உத்தரவை ஏற்றுப் பொருள் கண்முன் வந்து, பார்வையில் படுவது அன்னை செயல்படும் வழி.

பார்ட்னர் : இப்படிச் சொன்னால் புரியும்.

தாயார் : பிள்ளை வீட்டார், தாமே முன்வந்து பெண் வீட்டாரை அணுகி வரன் பேசுவதோ, எல்லாச் செலவுகளையும் தாமே ஏற்பதாகச் சொல்வதோ, நாம் அறியாதது. அது சமூகத் திருவுருமாற்றம். அது நடப்பதெப்படி? திருவுருமாற்றம் என்றால் பகுதிகள் முழுமையை ஏற்பதாக அர்த்தம். ஏற்றுச் செயல்பட்டால் அது ஏற்படும். முழுமை என்பது அனந்தம்.

கணவர் : முழுமை என்பது அனந்தமா?

பார்ட்னர் : நாமும், நம் மார்க்கட்டும் எதிரிகளல்ல, நம் தொழிலாளிகள் எதிரிகள் அல்லர். நாமனைவரும் முழுமை எனக் கொண்டால்.....

தாயார் : அது அன்னையைச் செயலில் கடைபிடிப்பதாகும். பொதுவாக ஒரு பெரிய காரியத்தைச் செய்பவர், அடுத்த விஷயத்தில் சில்லறையாக இருப்பதால் முழுமையின் முழுப் பலன் தெரிவதில்லை.

கணவர் : அம்முழுமையைக் காண நான் என்ன செய்யவேண்டும்?

தாயார் : பார்ட்னர் சொன்னதைச் செய்யவேண்டும்.

கணவர் : எப்படி?

தாயார் : மார்க்கட் நமக்கு அடுத்த பகுதி என்பதால் மார்க்கட்டைப் போட்டி மனப்பான்மையுடன் நினைக்கக் கூடாது.



கணவர் : அடுத்த கம்பெனி போட்டியன்றோ?

பார்ட்னர் : அடுத்த கம்பெனியை நம் முழுமையின் பகுதி என அறியவேண்டும்.

கணவர் : சரி.

தாயார் : அது பெரிய விஷயம். அதிர்ஷ்டம் வருவதை அவசியம் மறுக்கவேண்டும் என்பது மனித நியாயம்.

பார்ட்னர் : இது என்ன நான் கேள்விப்படாததாக இருக்கிறதே.

கணவர் : நாம் rivals போட்டி போடுபவனை நம் முழுமையின் பகுதியாக ஏற்றால் வாய்ப்பு வரும் என்கிறோம். மறுப்பதே மனித சுபாவம் என அன்னை கூறுவதை என் மனைவி அடிக்கடி சொல்வதுண்டு. 25 வருஷத்தில் 2350/- ரூபாய் நன்கொடை வசூல் செய்தவருக்கு வருஷத்திற்கு 85,000 ரூபாய் சொந்த வருமானத்தைக் காட்டியபோது, “நீ என்னிடம் வேலை செய்பவன். நீ சொல்லி நான் செய்தால் என்ன மரியாதை'' என ஒருவர் மறுக்கிறார் எனில் அதற்குமேல் என்ன விளக்கம் தேவைப்படுகிறது?

பார்ட்னர் : அவரவருக்கு முக்கியமானது என்று ஒன்றுண்டு. கோடீஸ்வரன் தாழ்ந்த ஜாதிக்காரனானால், மேல் ஜாதிக்காரர் அவனோடு பணத்திற்காக சம்பந்தம் செய்யமாட்டார்.

கணவர் : ஜாதியை ஓரளவு ஏற்கலாம்.

பெரியவன் : அம்மா அந்த வக்கீல் குமாஸ்தா பையன் வாங்கிக் கொடுக்கும் வேலை வேண்டாம் என்பதை அடிக்கடி சொல்வார்கள்.

சிறியவன் : யாரது?

கணவர் : அந்தப் பையன் நம் வீட்டுக்கு வந்து போனபொழுது அவர்கட்குச் சாப்பாடு இல்லை. பெரிய குடும்பம். நான் எப்படியாவது ஒரு வேலை எங்காவது வாங்கித் தர முயன்றபொழுது, "யாருக்கு வேண்டும் இது? நான் உங்களைக் கேட்கவில்லையே. எனக்கு உள்ளூரிலேயே இல்லாவிட்டால் வேலை வேண்டாம்" என்றான்.

பார்ட்னர் : அப்படி ஒருவன் அந்த நிலையில் சொன்னானா?

கணவர் : அப்படி மட்டுமே நாமெல்லாம் நடப்பதாக அன்னை கூறுகிறார்.

தாயார் : சம்பளத்திற்கு வேலை செய்பவன், எவ்வளவு வருவதானாலும் சொந்தத் தொழில் செய்யமாட்டான்.

பார்ட்னர் : அந்த தைரியம் வாராது.

கணவர் : நெருப்புப் பெட்டி வியாபாரி, ஷாம்பூவில் அதிக இலாபமிருந்தால் எனக்கு வேண்டாம் என்பான்.

பார்ட்னர் : புரிகிறது.

தாயார் : நெருப்புப் பெட்டி சிறியது. கொஞ்சமாக விற்கிறது. பெரிய சைஸ் ஏராளமாக விற்கிறது என்று தெரிந்தாலும், சரக்கை மாற்றமாட்டான்.

பார்ட்னர் : நாம் வாழ்க்கையைச் சுருக்கிக்கொள்கிறோம். அதிகமாகவும் சுருக்கிக்கொள்கிறோம். வருவது அந்த சுருக்கத்தின்மூலம் வரவேண்டும் என்கிறோம். இந்த மனப்பான்மை புரிகிறது.

தாயார் : உலகில் எதுவும் யாரையும் தேடி வருவதில்லை.

கணவர் : தரித்திரம்தான் வரும். உபத்திரவம் வரும்.



தாயார் : அன்னையிடம் ஆயிரம் வருகிறது. வருவதை ஏற்கும் மனம் மனிதனுக்கில்லை என்கிறார் அன்னை.

பார்ட்னர் : அதிர்ஷ்டம் வரும் ரூபத்தில் நாம் ஏற்பதே அதிர்ஷ்டம். அதிர்ஷ்டத்தை நமக்குரிய ரூபத்தில் வரச் சொல்வது தரித்திரம்.

தாயார் : மழை பெய்யும் மாதத்தில் பயிர் செய்யவேண்டும். பயிர் செய்யும்போது மழை பெய்யவேண்டும் என எதிர்பார்ப்பது முடியுமா?

கணவர் : நாங்களெல்லாம் என்ன செய்யக்கூடாது, என்ன செய்யவேண்டும் எனச் சொல்.

பார்ட்னர் : அப்படிக் கேட்கக் கூடாது என்று கூறுகிறாரே.

தாயார் : எந்த வேலையை முடிக்கவும் சில குணங்கள் வேண்டும்.

பார்ட்னர் : திறமை, பொறுப்பு, சாதுர்யம், அடக்கம் போன்றவை.

தாயார் : அவையில்லை என்றால் பேச்சில்லை. அவற்றைப் பெறும்வரை பேசவேண்டாம். அந்த வேலையைக் குறைந்தபட்சமாக்க, அதிகபட்சமாக்க எப்படிச் செய்வது என்று நமக்குத் தெரியும்.

கணவர் : இந்தக் குணங்களை அதிகபட்சமாக்க வேண்டும்.

பார்ட்னர் : இவற்றிற்கு எதிரான குணங்களை அடியோடு விலக்க வேண்டும்.

கணவர் : திறமைக் குறைவு, பொறுப்பின்மை, அசட்டுத்தனம், கர்வம்.

தாயார் : அவை வெளிப்படும் பேச்சு, நினைவு, உணர்வு விலக்கப்பட வேண்டும்.

சிறியவன் : பேசாமடந்தையாக இருக்கவேண்டுமா?

கணவர் : இதைச் சொல்கிறாயா?

தாயார் : இது என்ன?

கணவர் : அவனுக்கு மாற அபிப்பிராயமில்லாததால், அடுத்தவர் வாயை அடக்குகிறான்.

தாயார் : அதை என்னவென்று சொல்வார்கள்? குதர்க்கம் இல்லையா?

கணவர் : பிள்ளைகள் குதர்க்கமாக இருக்கிறார்கள், கண்டிக்கிறேன் என்றால், கூடாது என்கிறாய்.

தாயார் : அவர்களைத் திருத்த நாம் திருந்திக்கொள்ள வேண்டும்.

பார்ட்னர் : அப்படி நாம் திருந்தினால்?

தாயார் : பிள்ளைகளால் தொந்தரவு வாராது. அவர்களும் திருந்துவார்கள்.

பார்ட்னர் : ஏன் அதை நாம் செய்யக்கூடாது?

கணவர் : பார்ப்போம்.

பார்ட்னர் : நமக்கு உலகம் என்ன செய்யவேண்டுமோ, அதை நாம் பிறர்க்குச் செய்யவேண்டும் என்பது நல்ல சட்டமாயிற்றே.

தாயார் : பாக்டரியைப் பொறுத்தவரை அந்த ஒரு சட்டம் போதும் நாம் உலகப் பிரசித்தி பெற.



பெரியவன் : யாருக்காவது, ஏதாவது செய்யச் சொன்னால் எரிச்சல் வருகிறது.

கணவர் : நமக்கு எரிச்சல் ஏன் வருகிறது?

தாயார் : செய்யப் பிடிக்கவில்லை என்றால் எரிச்சல் வருகிறது. அன்னை நமக்குச் சந்தோஷமாகச் செய்யவேண்டும் எனில், நாம் பிறருக்குச் சந்தோஷமாகச் செய்யவேண்டும்.

சிறியவன் : ஏன் செய்யப் பிடிக்கவில்லை? மனம் பரந்தது!

பெண் : ஏம்மா செய்யப் பிடிக்கவில்லை?

தாயார் : செய்வதற்குள்ள தெம்பிருப்பதில்லை. இயலாமை என்கிறோம்.

பெண் : இயலாமை எதனால் வருகிறது?

தாயார் : வறுமை, அறியாமை, நோய். நோயிருந்தால் உடலால் முடிவதில்லை, வறுமையில் உணர்வால் முடிவதில்லை, அறியாமை மனத்தின் இயலாமை.

பெரியவன் : எரிச்சல் வந்தால் புத்தியில்லை எனப் பெயரா?

கணவர் : புத்தியில்லாதவனுக்குத்தான் எரிச்சல் வரும்.

பெரியவன் : எனக்குப் புத்தியில்லையா?

தாயார் : புத்தியில்லை எனப் புரிந்துகொள்ளும் புத்தி உனக்கிருக்கிறதே, போதாதா?

பார்ட்னர் : பண்பு, பெருந்தன்மை, பக்குவம், பவித்திரம் எப்படி வரும்?

தாயார் : எதையும் முயன்று பெற்றுக்கொள்ளலாம்.

பார்ட்னர் : பலருக்கு இயல்பாக எப்படி அமைகிறது?

தாயார் : பெருஞ்செல்வம், அபரிமிதமான படிப்பு, உயர்ந்த அந்தஸ்து, பரம்பரையான பண்பிருந்தால், அவை வரும் தலைமுறைகளில் இவற்றை உற்பத்தி செய்யும்.

கணவர் : நானிவற்றைப் பெற என்ன செய்யலாம்?

தாயார் : நாளுக்கு நாள் அன்னையை அதிகமாக அறிய முயலலாம். அடுத்த அடுத்த செயல்களில் அவரை அதிகமாக வெளிப்படுத்தலாம்.

பார்ட்னர் : உதாரணம்மூலம் சொல்லுங்கள்.

தாயார் : React செய்யக்கூடாது, எரிச்சல் படக்கூடாது, பிறர் நோக்கில் பிரச்சினையைப் பார்க்கவேண்டும், எதிலும் அபரிமிதம் கண்ணில்படவேண்டும், பொறுமைக்கே பூஷணமாக இருக்கவேண்டும், செய்யும் வேலையை திருந்தச் செய்யும்பொழுது அன்னை நினைவில் மட்டும் செய்யவேண்டும், எந்த நேரமும், எவர் முன்னிலையிலும், முகமலர்ந்து நிற்கும் அகமலர்ச்சி வேண்டும்.

கணவர் : பயித்தியமே பிடித்துவிடும்.

பார்ட்னர் : இத்தனையும் செய்தால் பயித்தியத்திற்கும் பக்குவம் வரும். என்ன செய்யவேண்டும் என்று சொல்லியதைப் போல், என்ன செய்யக்கூடாது என்று சொல்லுங்கள்.

தாயார் : வருத்தப்படக் கூடாது, குறைப்படக் கூடாது, குறை சொல்லக் கூடாது.

சிறியவன் : எரிச்சல் படக்கூடாது, கேலி செய்யக் கூடாது.

கணவர் : கேலி என்பது, குறையை மிகைப்படுத்திக் கூறுவதே ஆகும்.



பார்ட்னர் : அப்புறம்....

தாயார் : இடைவிடாத அன்னை நினைவு இதயத்தில் மலர்ந்து, முகத்தில் தெரியவேண்டும்.

பார்ட்னர் : ஏன் அறிவைவிட உணர்வை முக்கியமாகச் சொல்கிறீர்கள்?

தாயார் : அறிவு உயர்ந்தது, செயலாற்றிச் சாதிக்க முடியாதது. உடல் அசையும், உணரவோ, புரியவோ திறனற்றது. உணர்வில் அறிவும், செயலும் சந்திப்பதால் அதனால் சாதிக்க முடியும்.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அருளில் நம்பிக்கையுள்ளவர் அருளைச் செயல்பட அனுமதித்து கர்மத்தை கரைக்கிறார்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நம்முடைய உலகம் என்பது, நம் உணர்வால் உருவானது. அவ்வுணர்வுகளை நிர்ணயிப்பது நம் பண்புகள்.

பண்புகள் ஒன்று முதல் நூறுவரை நூறு நிலைகளில் உள்ளன. நம் பண்புகள் எவை? அவை உள்ள நிலை எது? என அறிவது முன்னேற்றத்திற்கு உதவும்.

***பண்பின் நிலை பக்குவத்தின் நிலை.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XII. Delight of Existence : The Solution

Page No.110
Para No.17

A question arises.

Why does the ONE take delight in such a movement?

All possibilities are present in Its infinity.

The possibilities can be variably realised.

The delight of existence lies in this.

It lies in the mutable becoming.

It is not in its immutable being.

That possibility can be worked out here.

It is done in the universe.

We are part of the universe.

It begins from the concealment of Sachchidananda.

It conceals in its opposite.

Delight lies in the self-finding.

The self-finding must be in terms of the opposite.

Infinite being loses itself in appearance.

It is an appearance of non-being.

It re-emerges as finite Soul.



## 12. ஆனந்தம் - விளக்கம்

ஒரு கேள்வி எழுகிறது.

ஏன் ஏகனான இறைவன் இச்சலனத்தில் ஆனந்தப்படுகிறான்?

அதன் அனந்தத்தில் எல்லாச் சந்தர்ப்பங்களும் உள்ளன.

இச்சந்தர்ப்பங்கள் பலவாறு பூர்த்தியாகும்.

சிருஷ்டியின் ஆனந்தம் இங்குள்ளது.

அது பிரகிருதியின் வளர்ச்சியிலுள்ளது.

அது அக்ஷரப் பிரம்மத்திலில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தை இங்கு நிறைவேற்றலாம்.

அதைப் பிரபஞ்சத்தில் செய்யலாம்.

நாம் பிரபஞ்சப் பகுதி.

சச்சிதானந்தம் மறைவதில் அது ஆரம்பிக்கின்றது.

தனக்கு முரணானதில் அது ஒளிகிறது.

கண்டுபிடிப்பது ஆனந்தம்.

கண்டுபிடிக்க நாம் எதிரான சந்தர்ப்பங்களை ஏற்கவேண்டும்.

அனந்த ஜீவன் தோற்றத்தில் மறைகிறது.

அது அசத்தின் தோற்றம்.

அது மனித ஜீவனாக வெளிவரும்.

It is the appearance.

Infinite consciousness too loses itself.

It appears as vast indeterminate inconscience.

It emerges in the superficial consciousness.

It is limited.

Infinite Force is self-sustaining.

It loses itself in the chaos of atoms.

It emerges in the insecure balance of the world.

Infinite Delight loses itself.

It is lost in the insensible Matter.

It emerges as pain, pleasure and indifference.

It is a discordant rhythm.

It appears too as love, hatred and indifference.

Infinite unity loses itself into chaos of multiplicity.

It emerges as a discord of forces and beings.

They seek to recover unity.

They do so by possessing, dissolving and devouring each other.

Real Sachchidananda must emerge in this creation.

Man is the individual.

He must become a universal being.

His mental consciousness is limited.

It must widen to the superconscient unity.

It embraces all.



அது தோற்றம்.

அனந்த ஜீவியமும் தன்னை இழக்கும்.

பரந்த நிலையற்ற ஜீவனற்ற வாழ்வில் தன்னை இழக்கும்.

மேலேழுந்த ஜீவியத்தில் அது எழுகிறது.

அது அளவுக்குட்பட்டது.

அனந்தமான சக்தி சுயமாக வாழக் கூடியது.

அது அணுக்களின் குழப்பத்தில் தன்னை இழக்கிறது.

உலகில் நிலையற்ற நிலையில் அது எழுகிறது.

அனந்தமான ஆனந்தம் தன்னை இழக்கிறது.

அது சொரணையற்ற ஜடத்தில் தன்னை இழக்கிறது.

அது வலி, சந்தோஷம், பராமுகமாக வரும்.

அது அபஸ்வரம்.

அன்பு, வெறுப்பு, பராமுகமாகவும் அது தோன்றும்.

அனந்தமான ஐக்கியம் துண்டுகளின் களேபரத்தில் தன்னை இழக்கிறது.

சக்தியின் சச்சரவாகவும், ஜீவனின் பிணக்காகவும் அது வரும்.

மீண்டும் ஐக்கியத்தை அவை நாடும்.

கரைவதிலும், விழுங்குவதிலும், ஆட்கொள்வதிலும் அவை வெளிவரும்.

இச்சிருஷ்டியில் உண்மையான சச்சிதானந்தம் எழவேண்டும்.

மனிதன் தனித்தவன்.

அவன் பிரபஞ்சத்திற்குரியவனாக வேண்டும்.

அவன் மனம் குறுகியது.

அது உலகத்தைக் கடந்து பரவவேண்டும்.

அனைத்தையும் அது தழுவவேண்டும்.

His heart is narrow.

It must learn the infinite embrace.

It must replace its lusts and discords by universal love.

His vital being is restricted.

It must become equal to the whole stock of the universe.

It must become capable of universal delight.

His physical being is a separate entity.

It must become one with the whole flow of the individual Force.

That Force is all thing.

His nature must reproduce unity in the individual.

The harmony, the oneness-in-all of All Bliss must come there.

It is a Bliss of the Supreme Existence - Conscious - Bliss.

Page No.111
Para No.18

Throughout the play the secret reality is the same.

It is the same delight of existence.

It is the same in the delight of subconscious sleep.

The individual emerges later.

There is a struggle and delight in the struggle.

The individual is the centre of all these changes.

The individual finds himself amid the mazes of dreams.

Varieties, vicissitudes, perversions, conversions, reversions are the struggle.

This is a half-conscious dream.



அவன் இதயம் சிறியது.

அனந்த ஜீவன்களை அது அரவணைக்க வேண்டும்.

காமம், கோபம் அன்பாக மாறவேண்டும்.

அவன் உணர்வு சுருங்கியது.

அது முழுப் பிரபஞ்சத்திற்குரியதாக வேண்டும்.

அதற்குப் பிரபஞ்ச ஆனந்தம் தேவை.

அவன் உடல் அவனுக்கே உரியது.

அது உலக சக்திகளின் ஓட்டத்துடன் கலக்க வேண்டும்.

அந்த சக்தி அனைத்திலும் உண்டு.

அவனுடைய சுபாவம் மனிதனில் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும்.

சுமுகம், அனைவரும் ஒன்று, அனைத்தும் ஆனந்தம் வரவேண்டும்.

சத்து, சித்து, ஆனந்தத்தைக் கடந்த ஆனந்தமிது.

லீலை முழுவதும் இரகஸ்ய சத்தியம், மாறாதது.

அதுவே சச்சிதானந்தம்.

ஆழ்ந்த நித்திரைக்குரிய ஆனந்தமும் அதுவே.

மனிதன் பிறகு வருவான்.

இப்போராட்டத்தில் ஓர் ஆனந்தமுண்டு.

எல்லா மாறுதல்களும் மனிதனில் ஏற்படும்.

கனவுலகச் சிக்கலில் மனிதன் நடுவிலிருக்கிறான்.

மாற்றம், ஏற்றதாழ்வு, குதர்க்கம், தலைகீழ் மாற்றம் ஆகியவை போராட்டம்.

இது அரைத் தூக்கக் கனவு.

**The eternal superconscient's delight has self-possession.**
**The individual must wake into it.**
**He must become one with Sachchidananda there.**
**Sachchidananda is indivisible.**
**This is the play of the One, the Lord, the All.**
**It reveals itself to our liberated and enlightened knowledge.**
**Ours is the material universe.**
**Its view is the conceptive standpoint.**
**This is that view.**

*The End.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

முயற்சிகளில் சிறந்தது மனத்தால் எழும் முயற்சி. எனவே அதுவே கடுமையானதும்கூட.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அல்ஜீப்ரா ஓர் உண்மையைக் குறிக்கிறது. கம்ப்யூட்டரில் உள்ள குறியீடுகள் ஓர் எலக்ட்ரானிக் உண்மையைக் குறிக்கின்றன. பிரம்மம் பிரபஞ்சத்தைத் தன்னுள் கொண்டது. பிரம்மத்தின் குறியீடுகள் ஒரு குறிப்பிட்ட உண்மையைக் குறிப்பவையில்லை. எதையும் சிருஷ்டிக்கும் சக்தியைக் குறிப்பவை. இது பிரம்மத்தின் தன்மை. சிருஷ்டிபோல் (fixed) மாற்றமில்லாதது இல்லை.

***பிரம்மத்தின் குறிப்பு எதையும் குறிக்கும், சிருஷ்டிக்கவும் செய்யும்.***



**சச்சிதானந்த ஆனந்தத்திற்கு சுய ஆட்சியுண்டு.**
**மனிதன் அதனுள் புனர்ஜென்மமெடுக்க வேண்டும்.**
**அங்கு சச்சிதானந்தத்துடன் அவன் கலக்கவேண்டும்.**
**சச்சிதானந்தம் அகண்டம்.**
**இதுவே இறைவனின் லீலை, ஈஸ்வர லீலை, ஏகனின் லீலை.**
**விடுதலையடைந்த ஒளி பெற்ற ஞானத்திற்கு அது தெரியும்.**
**நம் உலகம் ஜட லோகம்.**
**அது தத்துவரீதியாக அறிவதாகும்.**
**இதுவே அக்கண்ணோட்டம்.**

*முற்றும்.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சிறு ஆசையை விலக்குதல் சரி; அடக்குவது உதவும்; திருவுருமாற்றம் உயர்ந்தது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சுயநலம் செயலை மூன்று நிலைகளில் - பெருந்தன்மை, சாதாரணம், கொடுமையான பாவம் - கணிக்கிறது. தான் பிறருக்குச் செய்யும் அதே காரியத்தைத் தனக்கு வேறொருவர் செய்தால், பெருந்தன்மை கொடுமையாக மாறுகிறது. தான் சம்பந்தப்படாத இடங்களில் அது சாதாரண செயலாகிறது.

***பிறரில் கொடுமையைத் தன்னில் பெருந்தன்மையாக நினைப்பது சுயநலம்.***

## இம்மாதச் செய்தி

# அனுபவம் நம்பிக்கை தாராது.





**p.44 All now suppressed in us began to emerge.**
**அமிழ்ந்தவை ஆழத்திலிருந்து எழுகின்றன.**

- ✡ *ஆத்மா அஞ்ஞானத்தினின்று பெற்ற விடுதலை.*
- ✡ *மனமும், உடலும் பெற்ற முதல் ஆத்மீக மாற்றம்.*
- ✡ *பரந்த பிரம்ம-ஞானம் பரவெளியின்று பொழிந்தது.*
- ✡ *புதிய விவேகம் புத்துயிராக உருவம் பெற்றது.*
- ✡ *சத்தியத்தை ஏகனாக நோக்கி எழுந்த ஏழாயிரம் எண்ணங்கள்.*
- ✡ *அகத்தின் ஜோதியின் ஆயிரம் அறிவிப்பு.*
- ✡ *இயற்கையின் மரவுரியை எழிலாகக் கண்டனர்.*
- ✡ *நம்மைக் கடந்த நடனம் நாட்டியச் சிறப்பு.*
- ✡ *உள்ளடங்கிய உலகத்துடன் ஒன்றிய வாழ்வு.*
- ✡ *பெருந்திறன் பெற்ற பேறும், வியக்கும் அரவணைப்பும்.*
- ✡ *உலகைக் காக்கும் உயர்ந்தவருடன் உரையாடல்.*
- ✡ *ஊனக்கண் காணாத ரூபங்கள் அவன் முன் எழுந்தன.*
- ✡ *சூட்சுமத் தேவதைகளின் ஸ்தூல உருவங்கள்.*
- ✡ *பிரபஞ்ச சக்திகளின் பிணைப்பிலெழுந்த பின்னணி.*
- ✡ *மனித முயற்சிக்குப் பின்னாலுள்ள மறைந்த உலகம்.*
- ✡ *காலத்தின் இரகஸ்யம் கண்ணில் படும் பொக்கிஷம்.*
- ✡ *கடந்ததும், கற்பனைக்குரியதும் கணித்த கணிப்பு.*

✡ *பரவெளியின் பாதுகாப்பில் எழும் சிந்தனைக் கருவூலம்.*

✡ *ஏகனின் சுமுகம், இறைவனின் இயல்பு.*

✡ *மனிதனும், தெய்வமும் மனம் ஒத்த செயல்.*

✡ *அகத்தின் தழல் எழாத அவன் செயல்.*

✡ *புவியில் அவன் மகிமை பொக்கிஷமாய் எழுந்தது.*

✡ *உடலின் அணுக்களில் எழுந்த உலக மேதை.*

✡ *கர்மத்தால் கட்டுண்ட காலம் கருவை விளக்கியது.*

✡ *வித்தான சொத்து விரைவாக நடக்கின்றது.*

✡ *வாழ்வின் எல்லையைக் கடந்த வளமான ஆத்மீகம்.*

✡ *மனம் எனும் கோவிலில் மறைந்தெழுந்த மகிமை.*

✡ *மனித வாழ்வுக்கு மகிமை தரும் மணாளன்.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சரித்திரத்திலும், குடும்பத்திலும் பெருஞ்சாதனைகட்குப் பின் பெருங்கொடுமைகளும், அவற்றைப் பொறுத்துக்கொண்ட தியாகங்களும் நிறைந்துள்ளன. கஷ்டங்களைப் பட்டவர் அவற்றைப் பொருட்படுத்தாமல், அந்தச் சாதனைகளைப் போற்றுவதே வாழ்வின் சூட்சும இரகஸ்யம். இதை, மக்களின் ஒத்துழைப்பு, தியாகம் என்கிறோம். எந்தக் குடும்பம் அல்லது நாடு இந்த நோக்கத்தை விரும்பி ஏற்கிறதோ, அவர்கள் எந்த உயர்வையும் எட்டலாம்.



**"அன்பர் உரை"**

# பிரம்மம், புருஷா, ஈஸ்வரா — மாயா, பிரகிருதி, சக்தி

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*(இராணிப்பேட்டை தியான மையத்தில் 15.8.2003 அன்று திருமதி. வசந்தா லக்ஷ்மி நாராயணன் நிகழ்த்திய உரை)*

❑ **பிரம்மத்தைப் பற்றிய வாதம் தர்க்கம், ஆகியவை மனத்துள் உதித்தவை, அவை பிரம்மத்தில் உதித்தவை அல்ல.**

❈ *தனியாகச் சிறுபெண் குழந்தையுடன் முதல்முறை எப்படி அமெரிக்காவிற்குப் போகமுடியும்? எவ்வளவு ஆபத்தான செயல் அது, என்ன என்ன கோளாறு வரும், என பெற்றோர் பயப்படுவன எல்லாம் பெற்றோர் மனப்பீதியைச் சேர்ந்தன. அவள் விபரம் தெரிந்தவள், சௌகர்யமாகப் போய்ச் சேர்ந்தாள்.*

❈ *நாடு முன்னேற அமெரிக்க டாலர் வேண்டும். நாட்டில் பணம் இல்லை. நம்மவருக்கு டெக்னாலஜி வாராது. அமெரிக்காவில் பிறந்தால்தான் இந்தியர்களால் திறமையாக வேலை செய்ய முடியும் என்பது இன்றும் பரவலாக உள்ள கருத்து. பிரதமரிலிருந்து நம் போன்றவர்வரை அனைவரும் கூறுவது, நம்புவது. இக்கருத்து நமது மனத்திற்கு உரியது, நாட்டில் இல்லை என கம்ப்யூட்டர் கம்பெனிகள் நிரூபித்தபின்னும் நாம் இதை நம்புகிறோம், இது உண்மை அன்று.*

❈ *ஆற்றைக் கடந்த 10 மடையன்கள் அனைவரும் இருக்கிறார்களா என அறிய எண்ணிப் பார்த்து 9 பேர் இருப்பதாகவும் அதை அனைவரும் எண்ணிப் பார்த்து ஒருவர் ஆற்றில் தவறிவிட்டதாகக் கதை. எண்ணியபொழுது எவரும் தம்மை எண்ணவில்லை, தவறு எண்ணிக்கையில் இருக்கிறது. உண்மையில் எவரும் காணாமல் போகவில்லை என வழிப்போக்கன் விளக்கினான்.*

- ❈ நாம் நமது பரம்பரைப் பழக்கம் வழியாகப் பிரம்மத்தைப் பார்க்க முடியாது. மனம், பாவம், புண்ணியம், மோட்சம், நரகம், உயர்ந்தது, தாழ்ந்தது, ஆகியவற்றிலிருந்து வெளியே வந்து உலகைக் கண்டால் உலகம் அற்புதம் எனத் தெரியும். அது பிரபஞ்சத் தரிசனம். அதைக் கடந்து சென்றால் பிரம்ம தரிசனம் கிடைக்கும்.

❑ **சொல்லுக்கும் எண்ணத்திற்கும் அகப்படாத பிரம்மத்தைக் கண்டபின் நாம் வாழும் இவ்வுலகம் அந்த சூன்யத்திலிருந்து எப்படி வந்தது என்று நம்மால் கற்பனை செய்யமுடியவில்லை. அதனால் அது வேறு, இது வேறு என்று முடிவு செய்கிறோம். இது தவறான முடிவு, இதிலிருந்து எழுவதே நம் கஷ்டங்கள் எல்லாம்.**

- ❈ மாடு மேய்த்தவன் படித்து கலெக்டராக இருக்கிறான் என்று பார்த்தபின்னும் மாடு மேய்க்கும் பையன்களும் படிப்பால் உயர்வார்கள் என்று மனம் ஏற்பது இல்லை. தடை மனத்திற்கு உரியது, பையனிடம் இல்லை.
- ❈ 20000 ரூபாய் முதல் பல ஆயிரம் கோடியாகப் பெருகியதைப் பார்த்தும் நாம் அது எப்படி என அறியமுடிவதில்லை. கம்ப்யூட்டர் செய்தது என அறிகிறோம். செய்தது மனிதன், கம்ப்யூட்டர் இல்லை. மனம் தன் நினைவை விலங்காக்கிக் கொள்வது இல்லை. மனத்தைக் கடந்து வந்தால் விலங்கைக் காணமுடியாது.

❑ **பிரம்மத்தை சூன்யமாகப் பார்த்தார்கள். இந்த சூன்யத்திலிருந்து எதுவும் வாராது என்று முடிவு செய்துவிட்டனர். பகவான் இது சூன்யம் இல்லை, எல்லாவற்றையும் தன்னுட் கொண்டது எனக் கண்டார். அவர் வாதத்தை மாற்றிக்கொள்கிறார். எதனாலும் கட்டுப்படாத சூன்யம் பிரம்மம் என்பதை விளக்குகிறார்.**

- ❈ சுதந்திர இயக்கம் என்ற பிரம்மாண்டமான இயக்கம் மகாத்மா காந்தியின் மனதில் உற்பத்தியாயிற்று.



- ❈ படிக்காத செட்டியார் பல்கலைக்கழகத்தை நிறுவினார்.
- ❈ ஒரு மனித மனத்திலிருந்து ஒரு நெய்வேலி உற்பத்தியானது.
- ❈ ஒரு மனிதன் ஒரு குடும்பத்தை, நாட்டை உற்பத்தி செய்கிறான்.
- ❈ எதுவுமே இல்லாத மனிதன் எல்லாவற்றையும் உற்பத்தி செய்கிறான்.

  அதுபோல் எதுவுமே இல்லாத பிரம்மம் எல்லாவற்றையும் உற்பத்தி செய்கிறது.

❑ **அந்தப் பிரம்மம் நாம். நானே அந்தப் பிரம்மம் என்பது பிரம்ம ஞானம். அந்த ஞானத்திற்குப் பிரம்மத்தின் முழுமை, உலகத்தின் அற்புதம் தெரியும்.**

❑ **பிரம்மம் எதையும் உற்பத்தி செய்யவில்லை. பிரம்மத்தையும் எவரும் உற்பத்தி செய்யவில்லை. சிருஷ்டி என்ற சொல்லிற்கு உற்பத்தி செய்வது என்ற பொருள் அன்று, உள்ளதை வெளிப்படுத்துவது எனப் பொருள்.**

- ❈ பாங்க் பணத்தை உற்பத்தி செய்யவில்லை. நாம் பாங்கில் போடும் பணத்தை மற்றவருக்குக் கடனாகத் தருகிறது.
- ❈ சர்க்கார் அதிகாரத்தை உற்பத்தி செய்யவில்லை. மக்கள் சர்க்காருக்குக் கொடுக்கும் அதிகாரத்தைச் செலுத்துகின்றனர்.
- ❈ பிரம்மம் உலகத்தை உற்பத்தி செய்யவில்லை, தன்னுள் உள்ள உலகை பிரம்மம் வெளிப்படுத்துகிறது.
- ❈ மனம் கம்பெனி என ஒன்றை உற்பத்தி செய்யவில்லை. கம்பெனி மனத்துள் இருக்கிறது, அதை வெளிப்படுத்துகிறது. ஆயிரம் கம்பெனிகளைக் கண்ட நம் மனம் அவற்றை மனதில் ஏற்றிவைத்து இருப்பதை வெளிப்படுத்துகிறது. ஒரு முதலாளி முதன்முறையாகக் கம்பெனி என்று ஒன்றை ஏற்படுத்தவில்லை.

* *முதன்முறையாகக் கம்பெனி என்று ஒன்றை உற்பத்தி செய்தவர் உலகில் உள்ள கருத்தை மனதில் வாங்கி அதைக் கம்பெனியாக வெளிப்படுத்தினார்.*

- **இன்று நாம் காண்பவை அனைத்தையும் காணாதவையையும் தன்னுள் பெற்று உள்ள பிரம்மம் அவற்றை வெளிப்படுத்துவது சிருஷ்டி.**

- **மனம் பிரம்மத்தையும் அனந்தனையும் நேரடியாகப் பார்க்கவல்லது. அப்பார்வை குணங்களைக் கடந்து நேரடியாக சத் என்பதையும் குணங்களையும் பார்க்கலாம். பகுதியின் கருவியான மனம் குணங்களை சத் என்பதில் இருந்து பிரித்து தனியே காணமுடியும் என்பதால் பிரித்துக் காண்கிறது. அத்துடன் அவை வேறு என்றும் கூறுகிறது. மேலும் ஒன்றை ஏற்கும் மனம் அடுத்ததை இல்லை எனவும் கூறுகிறது. இவை பிரம்மத்தில் இல்லை, மனம் உற்பத்தி செய்தவை.**

* *நெருப்பு ஒளி வீசுகிறது. நெருப்பே ஒளி. நெருப்பு வேறு, ஒளி வேறு அன்று. ஒளி நெருப்பின் குணம்.*
* *கண்ணையும் பார்வையையும் பிரிக்கமுடியுமா?*
* *மிளகாயையும் காரத்தையும் ஒன்றாகக் காணமுடியாதா?*
* *அழகான முகத்தில் அழகைக் காண்கிறோம். அழகு உண்மை, முகம் இல்லை என்று கூறுவதுபோல் பிரம்மத்தையும் அதன் குணங்களையும் மனம் பிரித்து ஒன்றை ஏற்று அடுத்ததை மறுக்கிறது.*
* *பேச்சும் எண்ணமும் அதுபோல் ஒன்றானவை.*
* *வீரனும் வீரமும் இணைந்தவை.*
* *மலரும் மணமும் வெவ்வேறல்ல.*
* *பெண்ணும் பெண்மையும் கலந்து நிற்பவை.*
* *சமூகமும் சர்க்காரும் ஒன்றே.*
* *பிரம்மமும் அதன் வெளிப்பாடான மனிதனும் ஒன்றே.*



* *எழுத்தையும் எழுத்தாளரையும் பிரிக்கமுடியாது.*
* *மௌனமும் சப்தமும் வெவ்வேறு நிலைக்குரிய ஒன்றே ஆகும்.*
* *அலைகளும் கடலும் பகுதியும், முழுமையுமாகும்.*
* *நடிகனும் நடிப்பும் இரண்டறக் கலந்தவை.*
* *அன்பு நெஞ்சில் எழுந்து நெஞ்சே அன்பாவது.*
* *பதவியும் அதிகாரமும் சேர்ந்தவை.*
* *சர்க்கரையிலிருந்து இனிப்பு வேறுபட்டது அன்று.*
* *கடமையும் செயலும் கலந்தவை.*
* *பிரம்மமும் பிரபஞ்சமும் ஒன்றே.*
* *ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே.*
* *வீடே குடும்பம், குடும்பமே வீடு.*

- **பிரம்மம், ஈஸ்வரன், ஆத்மன், புருஷன் ஆகியவற்றைக் கண்டால் எந்தப் பிரிவினையும் இல்லாமல் ஒன்றாகக் காணப்படுகின்றன. பிரபஞ்சமும் அப்படியே, ஆனால் மனிதர்களையும் ஜீவராசிகளையும் கண்டால் அவை தனித்தனியாகப் பிரிகின்றன. இந்த முரண்பாட்டை எப்படி அறிவது?**

* *ஒன்று என்பதையும் ஒருமை என்பதையும் நாம் பிரித்து அறிவது இல்லை.*

* *ஒன்று என்பது எண், மூன்றுக்கு முன் இரண்டு இருப்பதுபோல் இரண்டிற்கு முன் ஒன்று உள்ளது. எண்களில் முதன்மையானது ஒன்று. அது இரண்டில் பாதி என்று சொல்லலாம். நான்கில் கால் பாகம் என்று சொல்லலாம். ஒருமை என்பது ஒரு தன்மை, அது எண் அன்று. ஒரே குணமுள்ள பல பொருட்களுக்கு ஒருமை உண்டு. ஆயிரம் மனிதர்கள் மனிதன் என்ற வகையில் ஒன்றாவார்கள். மலர் என்பது ஆயிரக்கணக்கான மலரைக் குறிக்கும் ஒரு சொல். மலர் என்ற தன்மை மலர்களுக்கு உரிய ஒருமை.*

- **மனிதன் சுயநலமானவன், மோட்சத்தை நாடினாலும் தனக்கு மட்டும் நாடுவான்.**

❋ *ஆன்மா பெறும் விடுதலை அவனுக்கு மட்டும் உரியது.*

❋ *குணம் பெறும் விடுதலை உலகை உய்விக்கும்.*

❋ *உடல் பெறும் விடுதலை உலகையே மாற்றும்.*

- **சர்வம் பிரம்மம் என்றார்கள் ரிஷிகள். ஆனால் உலகம் எப்படிப் பிரம்மம் என்று அவர்களால் விளக்கமுடியவில்லை. அதை சத்தியஜீவியத்தால்தான் விளக்கமுடியும். ரிஷிகளுக்கு அது இல்லை என்பதால் அவர்களால் மனத்தால் விளக்கமுடியவில்லை. பகவான் ஸ்ரீ அரவிந்தர் நமக்கு சத்தியஜீவியத்தை அளித்து அதன்மூலம் விளக்கத்தை அறியும் திறமையைக் கொடுத்து விளக்கத்தையும் அளிக்கிறார்.**

- **சாதாரண மனிதனுக்கு உலகம் எப்படி உற்பத்தியாயிற்று என்ற கேள்வி எழுவதில்லை. கேள்வி இல்லாதவன் பதிலை எதிர்பார்ப்பது இல்லை.**

- **ரிஷிகளுக்கு கேள்வி எழுந்தது, பதில் கூறும் கருவி இல்லாததால் பதில் கிடைக்கவில்லை.**

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நம் செயலின் குறைகளை, நாம் பொருட்படுத்துவதில்லை. பிறர் கண்ணோட்டத்தில் விஷயங்களைப் புரிந்துகொள்ள குறைந்தபட்சம் நாம் பிறர் குறைகளை நம் குறைகளைப் பொருட்படுத்தாததுபோல் பொருட்படுத்தக் கூடாது.

***'நம்மை'ப் போல் பிறரும் குறையற்றவரே.***



# அன்பர் கடிதம்

**அன்னைக்கு வணக்கம்!**

என் தங்கையின் வாழ்வில் ஏற்பட்ட ஓர் அற்புதத்தை, அன்னையின் அருளைப் பற்றி உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

தாயற்ற மூன்று பெண்களும், ஒரு தம்பியுமாக உத்தியோகம் பார்க்கும் தந்தையின் அரவணைப்பில் வாழும் எங்கள் குடும்பத்தில் கணவனுடன் வாழ முடியாத என் சிறிய பாட்டி எங்களுடன் சேர்ந்து கொண்டார்.

அக்காவைக் கட்டிக் கொடுத்தாகிவிட்டது. அவள் வாழ ஆரம்பித்த கதை பெரிய கதை. அன்னையின் அருளால் தற்போது அவள், நான் வியக்க, உலகம் வியக்க, வாழ்வு நடத்துவது அன்னைக்கும், எனக்குமே வெளிச்சம்.

தாயில்லாக் குறை தெரியக்கூடாதென்று அப்பாவும் நினைத்தார். நானும், என் தங்கையையும், தம்பியையும் அக்குறை போக்கி வளர்க்க முடிவு செய்தேன். நான் வயதுக்கு வந்தவள், அவள் சிறுமி. எல்லோரும் படிக்கிறோம்.

என் அக்காவையும் சேர்த்துதான் கூறுகிறேன். முடிந்தவரை, தங்கைக்கு எந்த வேலையும் வைக்காமல், வீட்டு வேலை, சமையல் எல்லாம் நானே முடித்துவிடுவேன். அவள் படிக்க வேண்டும், நன்றாகப் படிக்க வேண்டும், கஷ்டம் தெரியாது வாழவேண்டும், நல்லபடியாகக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்பது என் தந்தையின் ஆசையும்கூட. பால் நிறைய வாங்கி இரவில் எல்லோரும் பால் அருந்த வேண்டும். நானே காய்ச்சி எல்லோருக்கும் தருவேன்.

இந்தப் பாட்டி ஒரு மாதிரி. கணவனால் ஆதரிக்கப்படாததால், ஆண் வர்க்கத்தின் பேரிலேயே ஒரு துவேஷம். எங்கள் இருவரையும் எந்த ஆண் பிள்ளைகளோடும் விளையாட விடமாட்டார். என் தங்கையோ நல்ல குண்டாகவும், மிகவும் கலகலப்பாகவும் இருப்பதால், சில ஆண் பிள்ளைகளுடன் இருப்பாள்.

பாட்டிக்கோ அதை நினைத்தாலே அறுவருப்பு. திட்டித் தீர்த்து விடுவார். அவர் மனப்போக்குக்கு அறவே பிடிக்காது. காலத்தை அனுசரிக்கத் தெரியாதவள் பாட்டி. அதனால் தங்கை, பாட்டி கூறுவது எதையும் காதிலேயே போட்டுக்கொள்ள மாட்டாள். தாயில்லாது மிகவும் செல்லமாக வளர்ப்பதால், அவளுக்கு ரோஷம் அதிகம்.

ஒரு நாள் பாட்டி என்ன கோள்மூட்டினாரோ தெரியவில்லை, அப்பா வெறுப்பு வந்து, தங்கையை மனம் வெறுத்து, இரண்டு அடி அடித்துவிட்டார். எல்லாம் தெரிந்த அப்பாவே அடிக்கிறார் என்ற எண்ணம் தலைதூக்கி நிற்க முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டிருந்தாள். இரவு சாப்பிட்டு முடித்ததும், "அக்கா, என் பாலை நானே காய்ச்சிக் குடிக்கிறேன். நீ காய்ச்ச வேண்டாம்" என்றாள்.

கோபத்துக்கும், பாலைக் காய்ச்சுவதற்கும் என்ன சம்பந்தம்? சரி, கோபத்தை அப்படியாவது கழித்துக்கொள்ளட்டும் என விட்டுவிட்டேன்.

இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. விளக்கை நிறுத்தாமல் தங்கை ஏனோ விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். ''என்ன தூங்கலையா?''

"அக்கா, நான் செத்துடுவேனா?" பீதியுடன் கேட்டாள். "என்ன திடீர்னு சந்தேகம் வந்துவிட்டது உனக்கு?"

''இரண்டு பல்லியைப் பிடித்து, சாவடித்து, பாலில் போட்டு கொதிக்க வைத்து குடித்துவிட்டேன்''. ''எதுக்கு? ஏன் சாப்பிட்டே?''

''இரண்டு பசங்க காப்பி குடித்து இறந்துவிட்டதும், காரணத்தைப் பார்த்தால், அந்த காப்பியில் ஒரு பல்லி செத்திருந்ததைப் பேப்பரில் பார்த்தேன். அதேபோல் ஒரு பள்ளி மதிய உணவிலே ஒரு பல்லி விழுந்துகிடக்க, அதைச் சாப்பிட்ட 37 பிள்ளைகளும் மயக்கம் போட்டு விழுந்து ஆஸ்பத்திரிக்குப் போய் குணமானதைப் பார்த்தேன். பாட்டிப் பேச்சைக் கேட்டு அப்பா அடிச்சதை நினைச்சா செத்துடனும்போல பட்டது. அதான்! இப்போ ஏண்டா செஞ்சோம்னு பயமாயிருக்கு!



அன்றைக்கு அன்னையைக் கும்பிடும் பக்தர்கிட்டே, 'உங்களுடைய பரிவாலே தெளிந்த நான், நல்லா வளர்ந்து, படிச்சி, எல்லோருக்கும் உதவுகிற மாதிரி வாழ்ந்து காட்டுவேன்' என்று கொடுத்த வாக்கை நானே பொய்யாக்கிவிடுவேன் போலுள்ளது'' என்றாள்.

எனக்கே பயம் வந்து "என்னதான் செய்தாய், சொல்லு" என்று துருவிக் கேட்க,

''இந்த பாட்டிக்கு என்ன தெரியும். இந்தப் பாட்டி பேச்சைக் கேட்டுக்கொண்டு அப்பா இப்படி செய்கிறாரே. அப்பாவுக்கு எங்கே போனது புத்தி. படிச்சவருதானே! அவருக்கே தெரியவில்லை என்றால், நான் எப்படிச் சுதந்திரமா வாழ முடியும். அப்புறம் ஏன் வாழவேண்டும்? அப்படி நினைவு வந்த உடனே, பல்லி நினைவு வந்தது. அதனால்தான் நானே பாலைக் காய்ச்சிக்கொள்கிறேன் என்று சொல்லி, ஒரு பல்லியைப் போட்டு கொதிக்க வைத்தேன். முன்பே இது மாதிரி அதிகக் கஷ்டமாக இருந்தபொழுது அன்னையை வணங்கும் அந்த வீட்டுக்குக் கூப்பிட்டுப்போனாயே. 'எந்த கஷ்டம் வந்தாலும் இதை வைத்துக்கொள்' என்று அன்னையின் திருவுருவப் படத்தைக் கொடுத்து, அந்த நேரத்திலே உன் கஷ்டத்தையெல்லாம் சொல்லு, எல்லாவற்றையும் போக்கிக் கொடுத்துவிடுவார்கள் என்று சொன்னார் இல்லையா! அது நினைவுக்குவர காய்ச்சிய பாலை அன்னையின் முன் வைத்து 'அம்மா இந்த நேரத்தில் எனக்கு இதுதான் செய்யத் தோன்றுகிறது. என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று சொல்லி குடித்துவிட்டேன்.

ஒரு மணி நேரம் கழித்துப் பார்த்தேன். ஒன்றும் ஆகவில்லை. அந்த வேகத்திலேயே இன்னும் ஒரு பல்லியை அடித்து நன்றாகக் காய்ச்சி குடித்துவிட்டேன். அரைமணி நேரம் ஆகிறது. இப்பொழுதுதான் எனக்குப் பயம் வந்துவிட்டது, நான் செத்துவிடுவேனோ, எங்கம்மா மாதிரியே என்று. எந்த கஷ்டம் வந்தாலும், அன்னையும், நீங்களும் இருக்கும்போது பயப்படவே மாட்டேன். தெளிவாக வாழ்வை ஏற்றுக்கொள்வேன் என்ற அந்த வாக்கைக் காப்பாற்றமாட்டேன் போலுள்ளதே'' என வார்த்தைகளை நிதானமாகவும், தெளிவாகவும் பேசி முடித்தாள்.

அவள் பேசிக்கொண்டேயிருந்ததைக் கவனிக்கும்போது - அந்தத் தொனி - பக்த மீராவுக்குக் கொடுத்த பாம்பின் விஷம் செரித்து, ஜீரணமாகி, அவளுக்கு தேஜசைக் கொடுத்ததே, அதுபோல்தான் என் தங்கையின் தொனியும் இருந்தது. வெளியில் அன்னையின் அருளால் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "அன்னையிடம் சொல்லிவிட்டுத்தானே செய்தாய், ஒன்றும் ஆகாது" எனத் தைரியம் கொடுத்துக்கொண்டிருந்தேனேயொழிய, மனதில் கிலி பிடித்து, அடி வயிற்றைப் பிசைந்துகொண்டிருந்தது.

அந்த சம்பவத்தையே மறந்து, எதை, எதையோ பேசிக்கொண்டு இருந்தோம் (முக்கியமாக அன்னையையும், அன்னையின் செயல்களையும் குறித்து). விடிய ஆரம்பித்தது. பிசைந்துகொண்டு இருந்த என் மனதிற்கும் ஒரு விடியலின் ஒளி கிடைத்தது. இத்தனை மணி நேரம் ஆன பிறகு அந்த பல்லி விஷம் ஜீரணமாகியிருக்க வேண்டும், அன்னையின் அருளால். இல்லையேல் ஏதாவது அதன் அறிகுறி காட்டியிருக்க வேண்டுமே. தெளிவாகத்தானே இருக்கிறாள். நான் பார்ப்பதைவிட, நான் எண்ணமிட்டதைவிட தெளிவாக இருக்கிறாளே! ஆம்! தெளிவாகத்தான் உள்ளாள்.

இப்பொழுது, B.A. English Literature படிக்கிறாள். அன்னையின் அரவணைப்பை உணர்கிறாள். அப்பா அவளுக்கு ஒரு Encyclopedia வாங்கித் தந்துள்ளார்.

நான் இந்த கட்டுரையை என் தங்கையிடம் கொடுத்து இப்பொழுது படிக்கச் சொன்னேன். அவள் கூறியதாவது,

''நானா! இப்படிச் செய்தேன்!'' என்று மலைப்புடனும், திகைப்புடனும் படித்தாள். முழுவதும் படித்த பிறகு ''பைத்தியக்காரத்தனமான செயல் செய்து இருக்கிறேன். முட்டாள்தனமாகவும் செய்து இருக்கிறேன். நான் இவ்வளவு செய்தும், நான் வணங்கிய என் அன்னையின் அருளே எனக்கு பக்கபலமாக இருந்து என்னை அந்தப் பேரழிவிலிருந்து காப்பாற்றி, நல்வழிபடுத்திக்கொண்டும் இருக்கிறது" என்று முடித்தாள்.

❀❀❀





## Mother needs a question to respond.

**பதிலிறுக்க அன்னைக்கு ஒரு கேள்வி தேவைப்படுகிறது.**

நாமெல்லாம் பள்ளியில் படிக்கும்பொழுது, பாடம் புரியவில்லை என மாணவர்கள் எழுந்து கேட்பதில்லை. ஆசிரியரே கேட்கும்படிச் சொன்னாலும், அதனால் ஒரு பையன் கேள்வி கேட்டாலும், அவனை அதிகப்பிரசங்கி என்பர். நமது பரம்பரையில்

***பெரியவர்களைக் கேள்வி கேட்காமலிருப்பது மரியாதை.***

கேள்வி கேட்காத மாணவன் சொல்லிக்கொடுத்ததைக் கற்பான். அவனுக்குச் சொந்தமான புத்தி வாராது. மேதைகளாகப் பிறந்த குழந்தைகள் வாய் ஓயாமல் கேள்வி கேட்டபடியிருக்கும். கேள்விகள் எழாத மனம் மந்தமான மனம்.

புத்தருக்குக் கேள்வி எழுந்தது. துன்பத்தை எப்படிப் போக்குவது என்பது கேள்வி. பல ஆண்டு தியானத்தில் பதில் கிடைத்தது. மனத்தில் அந்தக் கேள்வி எழாதவர் புத்தர் உபதேசங்களைப் படித்தால் மனதில் நிற்காது. நின்றால் புரியாது. நம் மனத்திலில்லாத கேள்விகட்குரிய பதில் பயன் தாராது.

The Life Divine புரியாத புத்தகம். உலகம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது என்ற கேள்வியை பகவான் எழுப்பிப் பதில் தருகிறார். அந்தக் கேள்வி யார் மனத்தை உறுத்துகிறதோ, அவர்கட்கு அது புரியும். சங்கரரும், புத்தரும் கேட்ட கேள்வி அது. The Life Divine அவர்கட்குப் புரியும். இன்று உலகில் நிலவும் தத்துவங்களில் சிருஷ்டியை விளக்குபவை பல.

- *பைபிள் ஆண்டவன் உலகை 7 நாட்களில் சிருஷ்டித்தான் என்கிறது.*
- *பிரம்மா பொம்மை செய்து உயிர் கொடுத்தார் என்பது இந்து மதம் கூறுவது.*

❖ ***Big Bang****இல் பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்டு கல்லிலிருந்து உயிரும், உயிரிலிருந்து மனிதனும் பிறந்தது விஞ்ஞானி கூறுவது.*

ஒருவர் இதுபோன்ற தத்துவங்களை ஆராய்ச்சி செய்தால், அவருக்கு The Life Divine புரியும். அன்னை புதன்கிழமை, சனிக்கிழமை குழந்தைகட்கு விளையாட்டு மைதானத்தில் வகுப்பு நடத்துவார்.

- *அவர் கூறுவது ஸ்ரீ அரவிந்தம்.*
- *ஸ்ரீ அரவிந்தம் சிருஷ்டியை விவரிப்பது.*
- *சிருஷ்டி எந்த நேரமும் நம்மைச் சூழ்ந்துள்ளது.*
- *அதை நாம் எப்படி எதிர்கொள்வது என்று யோசனை செய்பவருடைய கேள்வி அன்னைக்குப் பதில் கூற உதவும்.*
- *கேள்வியை அன்னையே கேட்டு, பதிலும் அவரே சொன்னால் chessஇல் இரு பக்கமும் ஒருவரே ஆடுவது போலிருக்கும்.*
- *கேள்வி சிந்தனையைக் குறிக்கும்.*
- *சிந்தனை அறிவுக்கு விளக்கம் தரும்.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அநியாயம், பாரபட்சம், கோணல், தீமை, தவறு, குறை, தோல்வி ஆகியவைகள் வாழ்வின் பகுதிகள். சாதாரணத் திறமையைவிட அதிகத் திறமையுள்ளவன் இவற்றைப் பொருட்படுத்துவதில்லை. அவையும் அவனைப் பாதிப்பதில்லை. சராசரிக்குக் கீழுள்ளவன் வேலை செய்ய ஆரம்பித்தால் இவை அவனைப் பாதிக்கின்றன. (Not self) புறம், அகத்தைவிடப் பெரியது என அவன் காண்கிறான்.

***புறம் அகத்தைவிடச் சிறியவனுக்குப் பெரியது.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

கர்மயோகி

### 832) கட்டுக்கடங்காத உணர்வை கட்டுப்படுத்தினால், உள்ளிருந்து இறைவன் எழுகிறான். அவன் பிரகிருதிக்குக் கட்டுப்படாத நிலையில் எழுவான்.

***இறைவனை எழுப்பும் கட்டுப்பாடு.***

இறைவன் என்பது மனிதனைக் கடந்தது. எந்த நேரமும் நாம் இறைவனை அறிவதில்லை. ஒரு தீரச்செயல், விஸ்வாசம், பண்பு வாழ்வில் எழும் நேரம் நாம் இறைவனின் திருமுகத்தைக் காண்கிறோம். உயிரைத் திரணமாக நினைக்கும் நேரம் தெய்வம் வெளிப்படும் நேரம். அவை வாழ்வில் அடிக்கடி வருவதில்லை.

வாழ்விலுள்ளவை வழக்கமானவை. வழக்கம் பழக்கத்திற்குரியது. பழக்கத்தில் சுபாவம் வெளிப்படும், பண்பு வெளிப்படாது. 4 சீட் உள்ள பஸ்ஸில் 15 பேர் ஏறக் காத்திருந்தால், எப்படியாவது நாம் முந்திக்கொள்ள விரும்புவது சுபாவம். வரிசையாக நிற்பது மனித சுபாவமில்லை. எந்த நாட்டில் அதைச் செய்தாலும் அது கண்கொள்ளாக் காட்சி. அந்த நேரம் மனிதனில் தெய்வம் வெளிப்படும் நேரம்.

பூரண யோகம் என்று பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுவதை வாழ்வனைத்தும் யோகம் என்கிறார். எல்லாச் சாதாரண நிகழ்ச்சிகளிலும் புதைந்துள்ள இறைவன் வெளிவரும்படி வாழ்வது பூரண யோகமாகும். நாம் பிரகிருதி என்பது இயற்கை. நமக்கு நம் சுபாவம் இயற்கை. ஆசை, அவசரம், கோபம், வெறி, சோம்பேறித்தனம் போன்றவை மனித சுபாவம். கட்டுப்பாடு, நிதானம், அமைதி, சுறுசுறுப்பு, பதம், பக்குவம், பவித்திரம் இறைவனுக்குரிய குணங்கள். மனிதன் மனித சுபாவத்திற்குக் கட்டுப்பட்டவன் என்றாலும் ஏதோ

ஒரு நேரம் நாம் அப்படிப்பட்ட செய்திகளைக் கேள்விப்படுகிறோம். அவற்றுள் சில,

- *பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரைத் தேடி வந்து வரதட்சிணையின்றி, தம் செலவில் திருமணம் செய்ய முன்வந்தது.*
- *தகப்பனார், தாயார், மகனுக்குக் காலரா வந்தபொழுது கண்டுகொள்ளாமலிருந்தபொழுது முகம் தெரியாதவர் மகனுக்கு சிகிச்சை செய்து குணப்படுத்துவது.*
- *5 மாதச் சம்பளத்தை கைமாற்றாகக் கொடுத்தவர், பெற்றவர் மறந்து போனபொழுது, அவருக்கு நினைவுபடுத்த மறுத்தது.*
- *சர்க்கார் வேலையை ராஜினாமா செய்து நண்பனுக்குத் தொழிலில் சேவை செய்ய முன்வந்தது.*
- *இரவு 9 மணிக்கு தியான மையத்திற்குத் தம்மை அழைத்துவந்த குடும்பம் சொல்லாமல் வீடு திரும்பியபொழுது, இளம்பெண் தைரியமாக நான் அன்னையை நம்புவேன் என்று உறுதிபூண்ட பொழுது பொன்னொளி தன் கண் முன் தோன்றியது.*
- *பிரபலமான கூலிக்காரன் எஸ்டேட் முதலாளியின் அழைப்பை மறுத்து வருமானமில்லாத கணக்குப்பிள்ளையை விட்டு விஸ்வாசத்தால் வரமாட்டேன் என்றது.*
- *நட்பின் சிறப்பால் பெருந்தொகையை எளிய நண்பனிடம் நம்பி, உவந்து கொடுத்து செயல்பட்டது.*
- *சிவனடியார் வேண்டுகோளுக்கிணங்கி பிள்ளையைக் கறி சமைத்தது.*
- *60 வயதான பேராசிரியர், 85 வயதான குமாஸ்தாவாக ஓய்வு பெற்ற தகப்பனாரைத் தம் அன்றாட வாழ்க்கையை நடத்தச் சொல்லியது.*
- *பெரும்பணம், நகை, விலையுயர்ந்த பொருள்களை வேலைக்காரனை நம்பி பல நாள் விட்டுவைத்தது. அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக அவன் நடந்துகொண்டது.*
- *ஒரு கிராமம் முழுவதும் பண விஷயத்தில் தானே முன்வந்து நேர்மையாக இருந்தது.*
- *வசூல் என்று போகாமல் நிதி வசூலானது.*
- *சத்தியாக்கிரஹத்தை நாடு ஏற்றது.*



- *இங்கிலாந்து இந்தியாவைவிட்டு தானே வெளியேறியது.*
- *ஐரோப்பா முழுவதும் சரணடைந்தபின் இங்கிலாந்து தனியாக ஹிட்லரைத் தோற்கடித்தது.*

**இவை உள்ளிருந்து இறைவனை எழுப்பும் நேரமாகும்.**

❀❀❀

## 833) அறியாமையை மீறிய நேரம் உள்மனம் திறந்து வழி விடும். அறியாமையாலான மேல் மனத்தை விட்டு நகர்ந்தால், உள் மனத்தை நாடுவதாக அது அமையும்.

***அறியாமையைக் கடந்த உள்மனம்.***

வீடு என்றால் முன் பகுதி, உட்பகுதி எனப் பிரிந்திருக்கும். முன் பகுதி உலகுக்காக. பின் பகுதி வீட்டாருக்காக. உட்பகுதியில் ஒவ்வொருவரும் தங்கள் அந்தரங்கத்தை உணர்வர். ஓரளவு இந்த உதாரணம் மேல் மனம், உள் மனம், அடி மனம் ஆகியவற்றை விளக்க உதவும்.

**நாம் மனம் என அறிந்தது மேல்மனம்.**
**ரிஷி தியானத்தில் தம்மை மறந்து உயர்ந்து நிற்பது உள் மனத்தில்.**
**கிருஷ்ணன் வாயில் உலகம் தெரிந்தது, சம்பந்தருக்குப் பார்வதி பால் கொடுத்தது அடிமனம்.**

✡ *எரிச்சல் வருவது, எதுவும் பிடிக்காமலிருப்பது, சண்டை போடுவது, எதைச் சொன்னாலும் மறுத்துச் சொல்வது, குதர்க்கமாகப் பேசுவது, எக்ஸிபிஷனுக்குப் போனால் 50ஆம் வயதில் 15 வயதுப் பிள்ளை போல உலகை மறந்து திளைப்பது, யோசனையில்லாமல் பேசுவது, செய்த தவற்றை ஆர்வத்துடன் செய்வது, தலைகால் தெரியாமல் குதிப்பது, பதவி வந்தவுடன் அனைவரையும் ஆட்டிப்படைப்பது, பாசத்திற்காக உயிரை விடுவது,* **கண்டதும் காதல் கொண்டு கண் மூடி நடப்பது** *ஆகிய உலக வாழ்வின் உயர்வு, தாழ்வுகள் உள்ள நம் மனத்தை பகவான் மேல் மனம் என்று கூறுகிறார்.*

➳ ***காலம், மனம், அகந்தை, சிறுமை இதன் அம்சங்கள்.***

- *பிரம்மா உலகைப் படைத்தபொழுது அறிவை, 7 வகை அறியாமைகள் ஆக்கினார். அவ்வறியாமைகளைப் பூரணப்படுத்த இம்மேல் மனத்தை ஏற்படுத்தினார்.*

*அறியாமையைப் பூரணப்படுத்துவது என்றால் என்ன?*

- *வருஷத்தில் 27,000 ரூபாய் வருமானம் தரும் 30,000 முதலை அத்தொழிலிலிருந்து எடுத்து கைப்பணத்தைச் சேர்த்து இலட்ச ரூபாய்க்கு ஒரு சொத்தை வாங்கி அதில் வருஷத்தில் 35 ஆயிரம் நஷ்டம் எனக் கண்டார். இதை துர்அதிர்ஷ்டம் என்போம். இவர் அச்சொத்தை வாங்கும்முன் அதை அறிந்தவர்.* **அறிந்து வாங்குவது அறியாமையை பூர்த்தி செய்வது.**

✡ *தியானம், நிஷ்டை, சமாதி, மோட்சம் உள் மனத்திற்குரியது. பொறுமைசாலி, நிதானமானவர், எதற்கும் அசையாதவர், மலர்ந்த முகமுடையவர், எதிரிக்கும் தீங்கு நினைக்காதவர், நிலைகுலைந்த நேரமும் நிலை கலங்காதவர் என்பது உள்மனத்திற்குரியது.*

- *உள் மனம் சாட்சிப் புருஷனுக்குரியது.*
- *காலத்தைக் கடந்தது.*
- *சூட்சுமமானது.*
- *ஆன்மீகமயமானதன்று.*

✡ *அடி மனம், உள் மனத்தின் கீழ் பாதாளமும், பரமாத்மாவும் சேருமிடத்திலுள்ளது.*

- *ஆன்மீகமயமானது.*
- *சைத்தியப் புருஷனை தன்னுட்கொண்டது.*
- *தோல்வி, வருத்தம் அறியாதது.*
- *மரணத்தை வெல்லக்கூடியது.*
- *பகவான் ஸ்ரீ அரவிந்தரால் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.*

❀❀❀

*தொடரும்.....*

## ஜீவிய மணி

**தவிர்க்க வேண்டியதைத் தவிர்த்தால், மலர வேண்டியது மலரும். மனம் மலர, தவறு தவிர்க்கப்பட வேண்டும்.**





# இதுவோ உம் ரௌத்திரக் கருணை!

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

இரவு இங்கு பெண்கள் பூக்கூடைகளுடன் அன்னைக்குக் காத்திருப்பது வழக்கம். இதுபற்றிக்கூட முன்பு ஒரு முறை, ஒரு சுவையான செய்தியை ப்ரீத்தி சொல்லியிருக்கிறாள். சில நேரங்களில் அன்னை தம் அறையைத் திறந்துகொண்டு வெளியில் வர தாமதமாகுமாம். பெண்கள் ஆவலுடன் காத்திருந்து, பூக்களைச் சமர்ப்பித்து, ஆசி பெற்றுத் திரும்புவார்களாம். ஒரு முறை, ஒரு பெண்மணி இரவு கடக்கிறது என்று எண்ணி அறையில் பூக்கூடையை வைத்துவிட்டுத் திரும்பிவிட்டாராம். பிறகு அன்னை அக்கூடையைப் பார்த்துவிட்டு, "இது யாருடையது என்று எனக்குத் தெரியும். தேவர்களும், ரிஷிகளும் எனக்காகக் காத்திருக்கின்றனர். உங்களால் சிறிது நேரம் காத்திருக்க முடியவில்லையா?" என்று கோபமுடன் கூறினாராம். ப்ரீத்தியோ, ''அன்னையே! நீங்கள் ஆதிசக்தி என்பதை அறிந்தவர்கள் ரிஷிகளும், தேவ தேவியரும். நாங்களோ, எங்கள் சொந்த அன்னை என்று உம்மீது உரிமை கொண்டாடுகிறோம்" என்று கூறிவிட்டாளாம். அன்னை வியக்கத்தக்க வகையில் அமைதியாக பார்க்க, அவர் விழிகளில் 'தண்'ணென்ற சந்திரவொளி தோன்றி பரவியதாம்.

இவற்றையெல்லாம் மனதில் அசை போட்டவாறு புதிய பூத்தட்டு ஒன்றுடன் நானும் அன்றிரவே அன்னைக்குக் காத்திருக்கும் செயலில்

கலந்துகொண்டேன். காலையில் மிகுந்த ஆர்வத்துடன் வந்து வரிசையில் நின்று அன்னையின் அன்பின் அரவணைப்பைப் பெற்றேன். இப்போதோ அறியாமையால் கலங்கி, விட்டுவந்த வீட்டாரை எண்ணித் துன்புற்றேன் – என்கிறாள் உமா.

நீண்ட நேரம் கழித்தே அன்னை கதவைத் திறக்கிறார். எல்லோர் முகமும் மலர்கின்றன. வரிசையாக அன்னையிடம் சென்று பூத்தட்டுகளைச் சமர்ப்பித்து, ஆசி பெற்றுப் போய்க்கொண்டு இருந்தனர். கடைசியாக உமாவின் முறை வந்தது. அன்னை தன்னை அன்புடன் பார்த்து, ஆறுதல் கூறுவார் என்று தன் துயரங்களுடன் சென்ற உமாவை, அன்னை ஏதும் கூறாமல், பூக்களைக் கொடுக்க வந்தார். திடீரென்று கோபமானார். ‘‘எங்கே வந்தாய்? போய்விடு!’’ என்று கூறிவிட்டு, எழுந்து போய்விட்டார். ப்ரீத்தி வெளியே நின்றுகொண்டிருந்தாள்.

“என்ன உமா? ஏன் என்னவோ போலிருக்கிறாய்?” என்றாள் ப்ரீத்தி. ‘‘ஒன்றுமில்லை ப்ரீத்தி! நான் அறைக்குப் போகிறேன். காலையில் பேசுவோம்’’ என்று கூறி, விடைபெற்று தன்னறைக்கு வந்துவிட்டாள் உமா.

என்னாயிற்று? காலையில் அத்தனை பரிவாகத் தன்னை ஏற்றுக்கொண்டவர், இப்போது ஏன் தன்னை போய்விடு என்று கூறினார்? தனக்குள் அன்னையின் திவ்ய வடிவத்தைக் கற்பனை செய்து, ‘‘அன்னையே! உமக்கு என்மீது என்ன கோபம்? ஏன் என்னைப் போய்விடு என்றீர்? உமக்காக நான் ஏங்கவில்லையா?’’ என்று தனக்குள் அன்னையிடம் முறையிட்டாள்.

திடீரென ஞானோதயம்போல் அவளுக்குள், ப்ரீத்தி கூறிய ஸ்ரீ அன்னையின் ரௌத்திரம், ஒவ்வொருவரிடமும் உள்ள நீண்ட



நாள் நோய்களைப் போக்கிய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய் அணிவகுத்தன.

ப்ரீத்திக்குக் கையிலும், தலையிலும் கட்டிகள் வந்துகொண்டே இருந்தபோது அன்னை, ‘‘கூடாது, இது கூடாது’’ என்று சினந்து கூறியதும், அவள் கட்டியும், வலியும் நீங்கியது; சித்திராவுக்கு நிறுத்த முடியாத விக்கல் வந்தபோது, அவள் முதுகில் அன்னை ஓங்கித் தட்டியவுடன், அவள் விக்கல் நின்றுபோனது; அன்னையைக் காணவந்த பெண்மணி ஒருவரை அன்னை கன்னத்தில் அறைய, அவருடைய கடும் பல்வலி நீங்கியது; ப்ரீத்தியின் தாய் விபாவதி அடிக்கடி கீழே விழுவதைக் கேட்டதும், அன்னை, “அவள் ஏன் இப்படி அடிக்கடி விழுகிறாள்?” என்று கோபமாகக் கேட்டதிலிருந்து விழுவதே அடியோடு நின்றுபோனது; மீனுவிற்கு காலில் சுளுக்கு வந்து, நடக்க முடியாமல் நடந்தபோது ‘நிமிர்ந்து நட’ என்று அவளை அன்னை அதிகாரமாய் உத்தரவிட்டதும், அவளால் நன்றாக நடக்க முடிந்தது; என்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் அன்னையின் ரௌத்திரக் கருணையை அல்லவா வலியுறுத்தியது. இப்போது தானும் அவ்வாறே ஒரு பிழை செய்தது அவளுக்கு விளங்கியது. ‘மிச்சம், மீதியில்லாமல் உன்னை தெய்வ அன்னைக்குக் கொடுத்துவிடு’ என்ற பகவானின் கருத்தை ஏற்று, தன்னை அன்னைக்குக் கொடுத்துவிட எண்ணி, வீட்டைவிட்டு அவரிடம் வந்தபின், தன் சிந்தனை வீட்டை எண்ணி ஏங்கியது தன் ஜீவனின் நோயல்லவா? அதனை விரட்டவே அன்னை, ‘‘ஏனிங்கு வந்தாய்? போய்விடு!’’ என்று கூறியிருக்கிறார் என்று தெளிவேற்பட்டது.

*தொடரும்.....*

❀❀❀

**We know God in the descent; we do not know God in the ascent.**

**நமக்குக் கடவுளைத் தெரியும்; மனிதனில் கடவுளை நாம் காணவில்லை.**

- சிவனடியாரைச் சிவபெருமானாகக் கருதினர்.
- வைஷ்ணவர், அடுத்த வைஷ்ணவனை விஷ்ணுவாகக் கருதினர்.
- இவை நாட்டில் சிறப்பானவர் வாழ்விலிருந்தது உண்மை. பொதுமக்களிடையே இக்கருத்து நடைமுறையில் ஏற்கப்படவில்லை.
- கடவுள் உலகை சிருஷ்டித்தார் என்பதை மனம் ஏற்கிறது.
- ஜடம் பரிணாமத்தால் கடவுளை நோக்கி உயரும்பொழுது, மனிதனாக இருக்கிறது என்ற கருத்தில்லை.
- கோவிலில் விக்ரஹத்தை கல்லாக நினைக்காமல், கடவுளாக மனிதன் தொழுகிறான்.
- சிருஷ்டி ஜடத்தில் முடிகிறது. பரிணாமம் ஜடத்தில் ஆரம்பிக்கிறது.
- பரிணாமத்தில் கடவுள் ஜடத்திலிருந்து வெளிவருகிறார்.
- அதன் முடிவான கட்டம் இன்று மனிதன்.
- நாளை அது சத்தியஜீவனாகும்.
- இக்கருத்தை நாம் ஏற்றால் நாம் மற்றவரைக் கடவுளாக நடத்தவேண்டும்.
- மற்றவரைக் கடவுளாக நினைத்தால்,
  - அவரைக் குறை கூறக்கூடாது.
  - அவரை வணங்க வேண்டும்.



- அவர் செய்யும் கெடுதல்களை வரமாக ஏற்க வேண்டும்.
- உலகில் தீமையில்லை என ஒப்புக்கொள்ள வேண்டும்.
- Negative என்பதில்லை என்று நம்பவேண்டும்.
- பிறர் நமக்குச் செய்யும் தீங்கு, நன்மை என எண்ண வேண்டும்.
- புயலும், பூகம்பமும் ஆண்டவன் திருவிளையாடலாகும்.
- விஷ ஜந்துக்கள் அற்புதமாகும்.
- பிள்ளையைக் கொடுமைப்படுத்தும் பெற்றோர் கடவுள் எனக் கூறும்படியாகும்.
- வயிற்றில் எழும் பசி ஆண்டவனின் குரலாகும்.
- நாட்டில் போர் மூள்வது ஆண்டவன் செயலெனப்படும்.
- அணுகுண்டும் நல்லது எனக் கூறும்படி நினைக்கவேண்டும்.
- கன்னத்தில் விழும் அறை ஆண்டவனின் அன்புக்கரம் தீண்டுவதாகும்.
- அதேசமயம் அர்ஜுனன் உறவினரைக் கொன்று குவித்தது ஆண்டவனிட்ட கட்டளை என்பதுபோல் நம் வாழ்வில் நாமும் நம் கடமையைச் செய்ய வேண்டியிருக்கும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு பலனைப் பெற, உடல் உழைக்கின்றது. வேலைக்குரிய சக்தியை உணர்வு அளிக்கின்றது. மனம் புரிந்துகொள்ள சிந்தனையை நாடுகிறது (consciousness). ஜீவியம் அதே பலனைப் பெற விழிப்புடன் இருந்தால் போதுமானது.

***மனம் முயன்று பெறுவது அறிவு.***<br>
***உணர்வு சாதிப்பது சக்தி.***<br>
***உடல் பலனைச் சாதிக்கின்றது.***<br>
***ஜீவனுக்குரிய பலன் ஆன்மீக வளர்ச்சி.***

"அன்பர் உரை"

# டிசம்பர் 5ஆம் தேதி 1950 மகா சமாதி தினம்

*(சென்னை - மாம்பலம் தியான மையத்தில் 5.12.2003 அன்று திருமதி. விஜயா நாராயணன் நிகழ்த்திய உரை)*

பகவான் ஸ்ரீ அரவிந்தர் அரசியல் தலைவராகி, யோகத்தை மேற்கொண்டு, புதுவைக்கு அசரீரியை ஏற்று வந்து 40 ஆண்டுகள் இங்கிருந்தார். 1950ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் தேதி சமாதி அடைந்தார். ரிஷிகள் சமாதி அடைவதற்கும், பகவான் சமாதி அடைந்ததற்கும் வேறுபாடுண்டா? இவரும் மற்றவர்போல் முடிவை ஏற்றுக்கொண்டவரா?

சத்திய ஜீவியம் உலகுக்குப் புதியது. எனினும் வேதகாலம் முதல் பெரிய ஆத்மாக்கள் அறிந்தது. பலர் ஆத்மாவில் சத்தியஜீவியத்தை அடைந்துள்ளனர். ஒரு சாதகருக்கு எழுதிய கடிதத்தில் பகவான், ‘‘இந்தப் பகுதிகளில் வாழ்ந்தவர் ஒருவர் சத்தியஜீவிய சித்தி பெற்றவர்'' என்று எழுதினார். அது இராமலிங்க சுவாமி. சுவாமியின் அருட்பா ஒன்றை மொழிபெயர்த்து அன்னையிடம் இதுபற்றிக் கேட்க முனைந்தபொழுது, கேட்ட பிரெஞ்சு சாதகரிடம், ‘‘இவருக்கு சத்தியஜீவியம் உண்டு என்பதை அப்பாடலைக் கேட்டவுடன் நான் அறிந்தேன்'' என்றார். சுவாமி ஜோதியுடன் கலந்து சமாதியானார். பகவான் ஸ்ரீ அரவிந்தர் பிறப்பதற்கு இரு ஆண்டுகள் முன் சுவாமி சித்தி பெற்றதால், அவரே பகவானாகப் பிறந்திருக்கலாமா என்றொரு கேள்வியை எழுப்பினர். மறுபிறப்பு சிறு ஆத்மாக்களுக்கு உடனேயும், பெரிய ஆத்மாக்களுக்கு நெடுநாள் கழித்தும் உண்டு என்பது ஆன்மீக மரபு. அதனால் இந்த நம்பிக்கைக்கு அடிப்படையில்லை.



கல்கத்தா ஜோஸ்யர் ஒருவர் ஸ்ரீ அரவிந்தருடைய ஜாதகத்தைப் பார்த்துவிட்டு, இந்த ஜாதகன் மிலேச்ச எதிரிகளுடன் போராடவேண்டியிருக்கும். பழமாகப் பழுக்கும்வரை உலகில் வாழ்வார் எனக் கூறினார். இச்சாமிருத்யு - தானே இஷ்டப்படும்பொழுது உயிரை விடலாம் - யோகிகட்குப் பலிப்பதுண்டு. ஸ்ரீ அரவிந்தரைக் காலன் தொட முடியாது. அவரே முடிவு செய்யாமல் உயிர், உடலைவிட்டுப் பிரியாது. பூத உடலை நீத்து சூட்சும உடலில் யோகத்தைத் தொடர விரும்பி பகவான் உடலை விட முடிவு செய்தார். அவருடலில் பொன்னொளி உதித்து சில நாளிருந்தது. பொன்னொளி சத்தியஜீவிய ஜோதி. பகவானுடைய அவதாரச் சிறப்பை நாம் எந்த அளவு அறிவோம் என்பது தெரியவில்லை. ஆனால் அவரைப் பற்றிய சில விஷயங்கள் எவர் மனதையும் தொடும். அப்படி கென்னடி மனத்தைத் தொட்டதுண்டு.

இரண்டாம் யுத்தம் முடிந்தபின் வியட்நாம் போர் எழுந்தபொழுது உலகம் பல கருத்துகளைத் தெரிவித்தது. நெடுநாளைக்குப்பின் USA போரிலிருந்து விலகியது. இப்போருக்கு எதிராக US மாணவர் உலகம் புரட்சி செய்தது. 1950இல் பகவான் ஸ்ரீ அரவிந்தர் சைனாவின் ஏகாதிபத்திய நோக்கத்தைப் பற்றியும், அதன்பின் ரஷ்யாவின் உலக ஆதிக்கமிருப்பதையும் சுட்டிக்காட்டி, அவை தடுத்து நிறுத்தப்படவேண்டும், அது உலகத்திற்குச் சேவை என்று எழுதியிருந்தார். பிரச்சினை இல்லாதபொழுது எதிர்காலத்தில் எழும் பிரச்சினையை பகவான் எழுதினார். அப்பகுதியை சுதிர்கோஷ் என்பவர் கென்னடியைச் சந்தித்து, அவரிடம் காண்பித்தார். கென்னடி கவனமாகப் படித்தார். எழுதியுள்ளவையெல்லாம் சரி, டைப் செய்தவர் 1960 என்பதைத் தவறாக 1950 என டைப் செய்துள்ளார் என சுதிர்கோஷிடம் கூறினார். 1950இல் பகவான் சமாதியடைந்துவிட்டார் என சுதிர்கோஷ் கூறியபொழுது, ‘‘எங்கோ இந்தியாவின் ஒரு மூலையில் உட்கார்ந்து தியானம் செய்பவர், 1950இலேயே பின்னால் நடக்கப்போவதைக் கூறினாரா?'' என்று

கென்னடி கேட்டார். கேட்டவர் எழுந்து உள்ளே போனார். போனவர் மீண்டும் திரும்பி வந்து, ‘‘அடுத்த முறை வாஷிங்டனுக்கு வந்தால், என்னை வந்து பார்க்கவும்’’ என்றும் கூறினார். கென்னடிக்கு ஸ்ரீ அரவிந்தரைத் தெரிய முடியாது.

கென்னடியின் நண்பர் ஒருவர் அன்னையை வந்து தரிசனம் செய்தார். சத்தியஜீவியம் பற்றி விவரம் கேட்டார். அன்னை சத்திய ஜீவியத்தின் மூன்று முக்கிய அம்சங்களை அவருக்கு விளக்கினார். அவற்றுள் ஒன்று உடல் உலகெங்கும் சூட்சுமமாகப் பரவுவது. கேட்ட விவரங்கள் அவர் மனத்தைத் தொட்டன. அவர், கென்னடி இந்தியா வந்து அன்னையை சந்திக்க ஏற்பாடு செய்தார். அந்த நேரம் கென்னடி சுடப்பட்டார். ‘‘குருசேஷ்வ் ஆரோவில்லில் அக்கரை காட்டியபொழுது, அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். கென்னடி இந்தியா வர சம்மதித்தவுடன் சுட்டுக் கொல்லப்பட்டார். இதுவே தீய சக்திகள் செயல்படும் வகை’’ என அன்னை கூறினார்.

1939இல் ஹென்ரி போர்ட் கடவுளைக் காண விரும்பி யார் எனக்குக் கடவுளைக் காட்டினாலும் என் சொத்தில் பாதியைத் தருவேன் என்று கூறிய செய்தி அன்னைக்கு வந்தது. அவர் ஏற்றுக்கொண்டார். உலகப் போர் மூண்டதால் போர்ட் வருகை தடுக்கப்பட்டது. எவர் அன்னை விஷயத்தில் அக்கரை காட்டினாலும், அவர்களைத் தீயசக்திகள் தாக்கும். கென்னடிக்கும் அப்பரிசு கிடைத்தது. அன்னையிடம் செயல்பட்டது பகவானுடைய சக்தி. பகவான் இதுபோன்ற செயல்களில் நேரடியாகத் தலையிடுவதில்லை. அவற்றை அன்னையிடம் விட்டுவிடுவார்.

உலகப் போரை பகவான் அன்னையின் போர் என்று கூறுவார். பகவானுடைய சக்தியைச் செலுத்தி போரை வென்றது அன்னை. உலகப் போர் நடக்கும்பொழுது பகவான் ரேடியோ செய்திகளை ஆர்வமாகக் கேட்பார். ரேடியோ 300 அடி தூரத்தில் பவித்திராவின் அறையிலிருக்கும். ரேடியோவை வைப்பது பவித்ரா. ஒரு loud



speakerயை பகவான் அறையில் வைத்தார்கள். செய்தியை மட்டும் பகவான் கேட்பார். உலகத்தின் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளிலும் தாம் பங்குகொண்டதாகக் கூறினார்.

- *ரஷ்யப் புரட்சியில் தமக்கும் பங்குண்டு என்றார்.*
- *துருக்கியிலும், அயர்லாந்திலும் நான் எதிர்பார்த்தபடி யுத்தத்தில் காரியங்கள் நடந்தன என்றார்.*

உலகப் போரைத் தவிர்க்க பகவான் முயன்றார். அது முடியாது என்று தெரிந்தவுடன் போரை வெல்லும் முயற்சியில் ஈடுபட்டார். ஹிட்லர் வெறி பிடித்தவன். அற்புதமாகப் பேசுவான். கேட்பவர் மனம் கரையும். ஜெர்மனி முதல் போரில் தோற்றுப் பெற்ற அவமானம் நாட்டைத் தலைகுனிய வைத்தது. ‘பழிவாங்குவோம்’ என ஹிட்லர் செய்த சபதம் நாட்டை அவன் பின்னால் போகச் சொல்லியது. இங்கிலாந்தில் 240 போருக்குரிய விமானங்கள் உள்ளபொழுது ஹிட்லர் 750 bombers குண்டு போடும் விமானங்களைத் தயாரித்து விட்டான். எவரும் அவனை எதிர்க்கத் தயாரில்லை. போரில்லாமல் பிரான்ஸ், டென்மார்க், நார்வே, சுவீடன், பெல்ஜியம், பின்லண்டு ஆகிய நாடுகள் சரணடைந்தன. இங்கிலாந்து போர் தொடுக்கும் நிலையிலில்லை. சர்ச்சில் போரை வெல்லும் கருவி என பகவான் தேர்ந்தெடுத்தார். சர்ச்சில் இந்தியாவுக்குப் பரம எதிரி. மகாத்மா உண்ணாவிரதமிருந்தபொழுது, ‘‘ஏன் காந்தி இன்னும் சாகவில்லை’’ என வைஸ்ராயிக்கு சர்ச்சில் தந்தியடித்துக் கேட்டார். சர்ச்சில் குடும்பம் பரம்பரையான வீரர்கள். சர்ச்சிலை வீரர் என்பதைவிட வீரம் சர்ச்சில் உருவம் பெற்று வந்துள்ளது என்பது பொருத்தம். எந்த களத்தை விட்டு எவரும் ஓட்டம் பிடிப்பார்களோ, அந்த இடத்தை சர்ச்சில் விரும்பி நாடும் தன்மையுடையவர். ஸ்ரீ அரவிந்தர் சக்தி சர்ச்சிலை வந்தடைந்தது. பதவியின்றிருந்த சர்ச்சில் பதவி பெற்றார். பிறகு பிரதமரானார். உலகைத் திரட்டி உயிரைக் கொடுத்துப் போராடினார். ‘‘ஒரு மனிதனுடைய தைரியம் உலகைக்

காத்தது'' என்று அன்று சர்ச்சிலைப் பற்றிக் கூறினர். போர்க்களத்தில் உள்ள வீரர்களிடம் ரேடியோமூலம் பேசி உற்சாகப்படுத்தினார். போரை வென்றார். போரை வெல்ல ஆத்மசக்தியை தாம் சர்ச்சிலுக்கு அனுப்பியதாகக் கூறியுள்ளார்.

***இராமாவதாரம் ஆயுதம் தாங்கி இராவணனை அழித்தது.***

***கிருஷ்ணாவதாரம் போர்க்களம் சென்று ஆயுதம் ஏந்தாமல் கௌரவ வம்சத்தை அழித்தது.***

***ஸ்ரீ அரவிந்த அவதாரம் போர்க்களம் செல்லாமல் ஹிட்லரை அழித்தது.***

ஹிட்லர் முன் ஓர் வெண்ணிற தெய்வ உருவத்தில் தீய சக்தியொன்று தோன்றி, அவனுக்கு வெற்றி அளித்து வந்தது. ஹிட்லரைப் பிடிக்க முடியவில்லை. "அவனும் என் குழந்தையன்றோ!" என அன்னை அத்தேவதையைப் பற்றிக் கூறுகிறார். அவன் அடிக்கடி ஆசிரமம் வந்து என்ன நடக்கிறது என்று பார்த்துப் போவான். மக்கள் தெளிவற்றவர்கள், மேல்மனத்தால் செயல்படுபவர். இங்கிலாந்து நம் எதிரி. ஹிட்லர் இங்கிலாந்தின் எதிரி. எனவே ஹிட்லர் ஜெயிக்க வேண்டும் என்று அன்று இந்தியரில் பலர் நினைத்தனர். சுபாஷ் சந்திரபோஸ் ஹிட்லரை சந்தித்து ஆதரவு கேட்டார். இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஆட்சி இன்னும் 50 ஆண்டு பயன் தரும் என்று கூறிய ஹிட்லர் ஒரு நீர்மூழ்கிக் கப்பலை சுபாஷுக்குக் கொடுத்து ஜப்பானுக்கு அனுப்பினான். சாதகர்களில் சிலர் ஹிட்லர் வெற்றி பெற வேண்டும் எனப் பிரார்த்தனை செய்தனர். பகவான் அது தவறு எனச் சுட்டிக்காட்டினார்.

அன்னை ஹிட்லருக்குரிய தீயசக்தி உருவம் தாங்கி ஹிட்லர் முன் தோன்றி ரஷ்யாவைத் தாக்கும்படிக் கூறினார். ரஷ்யாவை ஹிட்லர் தாக்கினால் அவன் அழிவான். ஹிட்லரிடமிருந்து அன்னை ஆசிரமம் திரும்பும்பொழுது வழியில் அத்தீய சக்தியைச் சந்தித்தார்!



உலக யுத்தத்தில் டன்கர்க் போராட்டம் பெயர்பெற்றது. பிரிட்டிஷ் வீரர்கள் ஏராளமாக அங்குக் குவிந்துள்ளபொழுது ஹிட்லர் குண்டு போட்டு அவர்களை அழித்துவிடலாம் எனத் திட்டமிட்டபொழுது பகவான் அவ்விடத்தை மூடுபனியால் கவர்ந்து பிரிட்டிஷ் வீரர்களைக் காப்பாற்றியது உலகம் அறிந்த பெரிய நிகழ்ச்சி. ஆங்கில மொழியில் டன்கர்க் என்ற சொல் இடம்பெற்றது.

பகவானுடைய பொறுமைக்கு அளவில்லை. அவர் இந்திய குருமார்களைப் போன்று சிஷ்யர்களை நடத்தவில்லை. இந்த யோகத்திற்கு மனித குரு இல்லை என்றார். பகவான் மனிதரில்லை என்பதால் அந்த சட்டம் அவருக்கில்லை. சிஷ்யர்களை நண்பர்களாக நடத்தினார். ஒரு கடிதத்தில் உடனுள்ள சிஷ்யரை, "நண்பர்" என குறிப்பிட்டதைக் கண்டவர், ''ஏன் என்னை நண்பர் எனக் கூறுகிறீர்கள்'' என பகவானைக் கேட்கிறார். பகவான் அதற்கு அளிக்கும் விளக்கம் அடக்கத்தின் உச்சியைத் தொடுகிறது. 1938இல் கால் முறிந்தபின் சாதகர்கள் கடிதம் எழுதுவது நிறுத்தப்பட்டது. திலீப்குமாரும், நிரோத்பரனும் விதிவிலக்காக தினமும் பகவானுக்கு எழுதினார்கள். ஒருவரை மகனாகவும், அடுத்தவரை சகோதரனாகவும் கருதினார். அன்றாடம் அவர்கள் கடிதங்களுக்கு பதில் எழுதுவது கடினமான யோகப் பயிற்சிக்கு மாற்றாகக் கருதினார் என்று கூறுகிறார்.

இந்த யோகம் மனிதனுக்கில்லை. இறைவன் செய்யும் யோகம் இது என பகவான் கூறுகிறார். சாதகனுக்குரியது சரணாகதி. சரணாகதியை நம் நாடு யோகப் பகுதியாக நெடுநாளாக அறியும். கீதை சரணாகதியை மகுடமாக்கியது. சகல தர்மங்களையும் தியாகம் செய்து என்னை சரணடைந்தால் நான் உன் பாவங்களை அழித்து மோட்சம் தந்து புருஷோத்தமனையடைய உதவுவேன் என்று கீதை கூறுகிறது. வைஷ்ணவர்கள் சரணாகதியை யோகத்தின் சிகரத்திற்கு

கொண்டுபோனார்கள். அதனால் சரணாகதி தத்துவம் நாடறிந்தது. பகவான் கூறுவதும் சரணாகதியே. ஆனால் இவற்றிற்குள் எந்த ஒற்றுமையுமில்லை. ஒன்று பஞ்சாயத் பிரசிடெண்ட். அடுத்தது நாட்டின் ஜனாதிபதி. இரண்டிற்கும் பேர் ஒன்றே. பகவான் சரணாகதி என்பது ஜீவனை முழுவதும் சரணடைவது. கீதை கூறும் சரணாகதி மனத்தின் நம்பிக்கைகளை சரணடைவது. நம்பிக்கை மனத்தின் பகுதி, அது முழு மனமாகாது. மனம், உடல், வாழ்வு, ஆன்மா அனைத்தும் சேர்ந்தது ஜீவன். ஜீவனைச் சரணடைந்தால் மனிதன் சைத்தியப்புருஷனாகிறான், இறைவனாகிறான். அதன்பின் இறைவன் பூமாதேவியின் யோகத்தை ஏற்றுத் தானே அதைச் செய்கிறான். கீதையின் இலட்சியம் மோட்சம். ஸ்ரீ அரவிந்தம் மோட்சத் தகுதி பெற்று, மோட்சத்தைத் தியாகம் செய்து, சரணாகதியை மேற்கொண்டு இறைவனாகி, மனிதனுள் இறைவன் பிரபஞ்ச யோகத்தை மேற்கொள்வதாகும். ஒன்றை மற்றதுடன் ஒப்பிட முடியாது. இதை மேற்கொள்ளத் தேவையான பொறுமை கடலினும் பெரியது.

அன்னை உடற்பயிற்சியை ஆசிரமத்தில் ஆரம்பித்தபொழுது, வயதான சாதகர்கள் பலர் அதை ஏற்கவில்லை. வேண்டாவெறுப்பாக பலர் ஏற்றனர். அன்னை ஸ்ரீ அரவிந்தரும் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்றார். அன்னை கூறிய அனைத்தையும் ஏற்ற பகவான் இதை மறுத்தார். பகவான் மறுத்தார் என்பதால் ஒரு சில சாதகர்களும் பகவான் ஆதரவுடன் இதை மறுத்தனர். விளையாட்டு மைதானம் ஏற்பட்டது. அன்னை தினமும் அந்த நாட்களில் மைதானத்திற்குப் போவார்.

அந்த நாட்களில் - 1926 முதல் 1940, 1945வரை - எப்பொழுது சத்தியஜீவியம் உலகுக்கு வரும் என்பது ஆசிரமத்தில் அனைவருக்கும் எப்பொழுதும் ஆர்வமான பேச்சு. சத்தியஜீவியம் விளையாட்டு மைதானத்திற்கு வரும் என அன்னை அறிவித்தார்.



அதையறிந்தவுடன் அதுவரை மைதானத்திற்குப் போகாதவர், இனி போவார்கள் என எதிர்பார்த்தனர். அவர்களில் ஒருவர் பகவானுக்குக் கடிதம் எழுதி,

***அன்னை சத்தியஜீவியம் மைதானத்தில் இறங்கும் என்கிறாரே, நான் அங்கு போவதில்லையே, அப்படியானால், எனக்கு அது கிடைக்காதா?***

எனக் கேட்டார். சத்தியஜீவியம் வருவதானாலும், நான் என் போக்கை மாற்றிக்கொள்ள மாட்டேன் என்பது மனித மனம். இவர் பகவானுக்குத் தினமும் கடிதம் எழுதுபவர்களில் ஒருவர். இதுபோன்ற நினைவு யோகத்திற்கு எதிரி. இதைக் கேட்கவும் மனம் கஷ்டப்படுகிறது. முற்றும் துறந்த முனிவருக்கும் கோபம் வரும். பகவானுக்குக் கோபம் வரவில்லை. அவர் நகைச்சுவை மிகுந்தவர். பதிலாக அவர் கடிதம் எழுதினார்,

***சத்தியஜீவியம் மைதானத்தில் வந்தால், அதை நீங்கள் மட்டும் இழக்கமாட்டீர்கள், நானும் இழந்துவிடுவேன்***

என்றார். அப்பொறுமை மனிதனுக்கில்லாதது. அத்துடன் 1956இல் சத்தியஜீவியம் வந்தபொழுது விளையாட்டு மைதான தியானத்தில் வந்தது. 1950இல் பகவான் சமாதியடைந்ததால் அவர் அதைப் பெறவில்லை. கடிதம் எழுதியவரும் பெறவில்லை. அன்னை, பகவான் வாக்குகள் பலித்தன. இந்த யோக ரகசியம் வேதனை. உடல் நெருப்பாக எரியும். எரிந்ததை பகவான், அன்னையிடமும் கூறவில்லை. அதுபோல் தன்னுடல் 1970க்குப் பின் எரிய ஆரம்பித்தபொழுது, அன்னை, ஸ்ரீ அரவிந்தர் பட்ட வேதனையை முதன்முதலாக அறிந்தார். உலகம் இன்பம் துய்க்க யோகம் செய்த பகவான் நாள் முழுவதும் எரியும் நெருப்பில் உட்கார்ந்து வேதனையின் உச்சகட்டத்தை அனுபவித்தார்.

❀❀❀

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Mental Peace of the Industrialist | ரூ. 30 |
| 2. | Sri Aravindam | ரூ. 40 |
| 3. | Luck | ரூ. 50 |
| 4. | A Discussion on The Life Divine | ரூ.100 |
| 5. | Life & Teachings of Sri Aurobindo and The Mother | ரூ.120 |
| 6. | Spirituality and Prosperity - I | ரூ.150 |
| 7. | Spirituality and Prosperity - II | ரூ.200 |

மற்ற வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் ஜீவன் | N. கண்ணன் | ரூ. 30 |
| 2. | தேடிவரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. | திருவருளே தீராத செல்வம் | N. அசோகன் | ரூ. 75 |
| 4. | திருவடி தரிசனம் | N. அசோகன் | ரூ. 75 |
| 5. | அருளோவியம் | N. அசோகன் | ரூ. 80 |
| 6. | பக்தியும் சேவையும் | N. அசோகன் | ரூ.100 |
| 7. | சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. | சத் புருஷன் | விஜயா & விசாலம்* | ரூ. 20 |

*சென்னையில் மட்டுமே கிடைக்கும்.

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# அன்னை மறந்து போகும்

உமாபதி சிவம் போன்றவர் பெரிய பக்தர்கள். அப்பைய தீக்ஷிதர் பரம்பரை பெரியது. **சிவபெருமான் மீதுள்ள பக்தி, பயித்தியம் பிடித்தாலும் போகக் கூடாது எனப் பிரார்த்திப்பது உயர்ந்த பக்தி**. அப்படி பயித்தியம் பிடித்த நிலையில் சிவனைப் பற்றி எழுதிய ஸ்தோத்திரம் பிரசித்தி பெற்றது.

- *நம் போன்றவர்க்குப் பிரச்சினை தீர்ந்தவுடன் அன்னை மறந்து போகும்.*
- *சிறு தொழில் சேவையால் பெருக ஆரம்பித்தவுடன் - 7,8 மடங்கு பெருகியவுடன் - அன்னை நினைவு வாராது என்பதுடன் வீட்டிலுள்ளவர், "இது என்ன தியானம், சேவை, ஏனிப்படி நேரத்தை வீணாக்க வேண்டும்" என்பார்கள்.*
- **நம் வீட்டார் அப்படிப் பேசுகிறார்கள் எனில் நம் மனம் அன்னையை விட்டகன்றுவிட்டது எனப் பெயர்.**
- *மனித சுபாவத்திற்கு ஆதாயம் முக்கியம்.*
- *ஆதாயத்தை நாடி வருபவர்க்கு அன்னை ஆதாயத்தைத் தருகிறார்.*
- *ஆதாயத்தைப் பெற்று அன்னையை மறப்பது சட்டம், மறக்காதது விதிவிலக்கு.*
- *ஆதாயம் அகந்தையை வளர்க்கும்.*
- *அகந்தை ஆதாயத்தால் தன்னையே அழித்துக்கொள்ளும்.*
- *அகந்தை அழிவது ஆதாயத்தை நாடியதால் பெற்ற ஆன்மீக ஆதாயம்.*
- **ஆதாயம் கூட வாராது; அன்னை நம்மைவிட்டு அகலமாட்டார்.**
- *ஆதாயத்தை ஏற்று, அன்னையை விட்டகன்றவர் கண்ணில் தனக்கு வரவேண்டியது தன்னுடனிருந்தவர்க்குப் போனது தெரிவதில்லை. பெற்றது 10, இழந்தது ஆயிரம்.*

❀❀❀

# தவறாது, தவறினால் பெரியது வரும்

ஐந்திற்கு இரண்டு பழுதில்லை என்பது பழமொழி. ஐந்தும் கூடிவரும் என எவரும் கூறமுடியாது. அன்பர்கள் அன்னையை அறிந்தபொழுது, காரியம் தவறாமல் நடக்கும், வேண்டியனவெல்லாம் நடக்கும், நினைத்தனவெல்லாம் நடக்கும், நினைக்காதனவெல்லாம் நடக்கும், அப்படியிருந்தும் அன்னை மறந்துபோகும். ஆனால் முக்கியமானது ஒன்று பிரார்த்தனைக்கு நகராது. அது மனமாற்றத்திற்கு நகரும். நகரும்பொழுது அப்பொழுதே நடக்கும், அற்புதமாக நடக்கும்.

***அந்த நிலையிலும் சமர்ப்பணம் பலிக்காது.***

***சமர்ப்பணம் செய்யமுடியாத நிலையில் இப்படி இத்தனை காரியங்கள் நடக்கும். எதுவும் தவறாது.***

***தவறாது, தவறினால் பெரியது வரும்.<br>மிகப்பெரியது வரும், பிரம்மாண்டமானது வரும்.***

அப்படி நடந்தாலும் அகந்தை கரையாது, சமர்ப்பணமாகாது. இதுவரை வாழ்விற்குரியன, இதற்குமேல் சமர்ப்பணம். அதைத் தொடர்ந்து சரணாகதி. அவை யோகத்திற்குரியது. ரிஷிகள் முடியாது எனக் கைவிட்ட யோகம் அது. அது நம்மால் முடியாது. நாம் சரணடைந்தால் அன்னை நம்முள் அதை அப்பொழுதே சாதிப்பார். பெரியது என்றால் அரை கோடி வியாபாரம் செய்பவருக்கு 1 கோடி ஆர்டர் பெரியது. 9 கோடி ஆர்டர் பிரம்மாண்டமானதன்று, ஆனால் மிகப் பெரியது. 90 கோடி பிரம்மாண்டமானது. இவையெல்லாம் எல்லா அன்பர்கட்கும் வரவில்லை. ஈடுபாடுள்ளவர்க்கு இவை தவறாது வந்துள்ளன. மனத்தின் வக்ரங்களில்லாத இடத்தில், தூய்மையான மனமுள்ள இடத்தில் வாழ்வு யோகமாகும். வாழ்வில் குறையிருந்தாலும் உழைப்பு, நாணயம், விஸ்வாசம் போன்றவை அக்குறையை மீறி பலிப்பது மேற்சொன்னது. குறையற்றவருக்கு வாழ்வில்லை. அவருக்குப் பணம் தேவையில்லை. அவர் வாழ்வு யோகமாகும்.

❀❀❀